பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 17 புதன்கிழமை (01.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 217

# அகதிகள் புனர்வாழ்வுக்கு இலங்கையிடம் உரிய திட்டம் எதுவும் இதுவரை இல்லை

## உதவத் தயாராக இருப்பதாகக் கூறுகிறார் சிதம்பரம்



சென்னை, ஜூலை 01

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் விடயத்தில் இலங்கை போதியளவு நடவடிக்கைகளை இன்னும் மேற்கொள்ளவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ளார் இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம். அகதிகளின் புனர்வாழ்வுப் பணிகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க இந்தியா தயாராக இருக்கிறது என்றும் ஆனால் இதுவரை இலங்கை அரசிடம் அதற்கான உரிய திட்டம் எதுவும் இல்லை என்றும் அவர் கவலை தெரிவித்திருக்கின்றார்.

காரைக்குடியில் உள்ள தமது சிவகங்கைத் தொகுதி யில் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையிலேயே இந்திய உள்துறை அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு இந்தியா 500 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. எனினும், இலங்கை இன்னமும் புனர்வாழ்வுத் திட்டமொன்றை உருவாக்கவில்லை. நாங்கள் இது குறித்துக் கவலையடைந்துள்ளோம் - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாட்டில் உள்ள இலங்கை அகதிகளை வலுக்கட்டாயமாகத் திருப்பியனுப்பப் போவதில்லை என்றும் இந்திய உள்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அவர்கள் சுய விருப்பத்துடன் திரும்பிச் செல்வதற்கு விரும்பினால் அதற்கு இந்திய(12 ஆம் பக்கம் பார்க்க)

## காஸின் விலைகளில் மாற்றம்

கொழும்பு, ஜூலை 1

நேற்று நள்ளிரவில் இருந்து அமுலுக்கு வரும் விதத்தில் 'ஷெல் காஸி'ன் விலை 53 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதேவேளை 'லாவ் காஸி'ன் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஷெல் காஸின் புதிய விலை 1447 ரூபாவாகவும் லாவ் காஸின் புதிய விலை 1407 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் விலை தொடர்பான குழுவின் நேற்றைய கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-7)

# அகதிகளின் வாழ்வை வழமைக்கு கொண்டுவர அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது அரசாங்கம்

## அமைச்சர் ஹெகலிய சொல்கிறார்



கொழும்பு, ஜூலை 01

போரினால் இடம்பெயர்ந்த மக்களை பராமரிப்பது எமக்குள்ள பெரிய கடமை. அந்த மக்களின் நலனுக்காக அதிகூடிய முக்கியத்துவத்தை வழங்குகின்றோம். அவ்வாறு செய்யாவிடில் அவர்களை புலிகளின் பிடியில் இருந்து மீட்டதில் எந்தவித பயனும் இல்லாமல் போய்விடும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்புத் துறைப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நாம் இப்போது அதிககவனம் செலுத்துவது அகதிகள் விடயத்தில்தான்.(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் பல பகுதிகளில் கடும் மழை; மலையகத்தில் மண்சரிவு அபாயம்!

கொழும்பு, ஜூலை 01

நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக வெள்ளம் மற்றும் மண் சரிவு அபாயம் உருவாகியுள்ளதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது.

குறிப்பாக மலையகப் பகுதிகளில் தொடர்ந்து 24 மணித்தியாலங்களுக்கு மேலாக மழை பெய்தால் மண் சரிவு அபாயம் பல பகுதிகளில் ஏற்படலாம் என தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலைய தேசிய ஒருங்கிணைப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் எச்சரித்துள்ளார்.

இரத்தினபுரியின் கஹாவத்த, கலவான, எகாலியகொட,பெல்மதுல்ல, எலபத்த ஆகிய பகுதிகளில் மண் சரிவு(12 ஆம் பக்கம் பார்க்க)

# உதயன் தடையின்றி வெளிவருவதற்கு ஆசிரியரிடம் ஜனாதிபதி உத்தரவாதம்

## பணியை அச்சமின்றித் தொடருங்கள் என்கிறார்



கொழும்பு,ஜூலை1

''எந்தவித அச்சுறுத்தலுக்கும் உள்ளாகாமல் 'உதயன்' நிறுவனம் சுதந்திரமாக இயங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது. பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து நாடு விடுவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் கருத்து வெளியிடும் சுதந்திரம், ஊடக சுதந்திரம் ஆகியவற்றை நசுக்குவதற்கு இடமளிக்கமுடியாது. அத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் சக்திகளைத் தேடிக் கண்டுபிடித்து அடியோடு அடக்குவதற்கு உறுதியான நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்படும். ஆரோக்கியமான ஊடகப்பண்பு நிலவுவதையே அரசு விரும்புகின்றது. அந்த வகையில் 'உதயன்' பத்திரிகையும் தனது பணியைத் தொடர்வதையே நாம் விரும்புகின்றோம்.

உதயன் பணியாளர்களும், நிறுவனமும் தமது கடமையை அச்சமின்றித் தொடரலாம். அத்தகைய அச்ச மற்ற சூழ்நிலையை நாம் உறுதி செய்வோம்''

- இவ்வாறு 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியர் என்.வித்தியாதரனிடம் உறுதி தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய வெளிவிவகார செயலாளராக நிருபமா ராவ் நியமிக்கப்பட்டுள்ளார்



புதுடில்லி,ஜூலை 01

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளராக திருமதி நிருபமா ராவ் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனம் குறித்து அரசாங்கம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாகஅறிவித்தது.

வெளிவிவகார அமைச்சுச் செயலாளராகப் பணிபுரியும் சிவ்சங்கர் மேனன் இம்மாதம் 31 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுச் செல்வதை அடுத்து அவரது இடத்துக்கு நிருபமா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓகஸ்ட் முதலாம் திகதி பதவியேற்கவிருக்கும் திருமதி நிருபமா ராவ் இப்போது சீனாவில் தூதராகப் பணியாற்றி வருகிறார்.

இந்தியாவில் இரண்டாவது பெண் ஒருவர் வெளிவிவகார(12 ஆம் பக்கம் பார்க்க)

# 22 ஆயிரம் புலிகள், 5 ஆயிரம் படையினர் வன்னி யுத்த நடவடிக்கைகளில் பலி!

## இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜூலை 01

வன்னி படை நடவடிக்கையின்போது 22 ஆயிரம் புலிகளும், 5 ஆயிரம் படையினரும் உயிரிழந்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மேலும் 22 ஆயிரம் படையினர் காயமடைந்துள்ளதோடு, 10 ஆயிரம் புலிகள் சரணடைந்தும், கைது செய்யப்பட்டும் உள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் முடிவுற்றபோதிலும் எமது படையினரின் செயற்பாடுகள் தொடரும். மீட்கப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைகள் பற்றிய தீர்மானத்தால்

# சட்டசபையிலிருந்து அ.தி.மு.க.வினர் வெளியேற்றப்பட்டனர்; பா.ம.க., ம.தி.மு.கவினர் வெளிநடப்பு!

சென்னை, ஜூலை 01

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகத் தீர்மானம் கொண்டுவரவேண்டும் என வலியுறுத்தி தமிழக சட்டசபையில் கோஷம் எழுப்பியதை அடுத்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் கூண்டோடு வெளியேற்றப்பட்டனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் உறுப்பினர்களுக்கு இடையே கடும் வாக்குவாதமும் மோதலும் ஏற்பட்டது. இதனையடுத்து பா.ம.க., ம.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாபெரும் மலிவு விற்பனை

**இன்று (01.07.2009) தொடக்கம்**

ஆடித் தள்ளுபடியில் அதிரடிக் கழிவுடன்
சில்க்சாறி, கொட்டன் சாறி, கோலம், பனாறஸ் சாறிகள்,
ஸ்கேட், பிளவுஸ், பஞ்சாபி, சேட், ரவுசர்,
சிறுவர்களுக்கான சூட் வகைகள் அனைத்தும்
40 வீதம் வரையான கழிவுடன்

**கணேசன் சென்ரர்,**
கே.கே.எஸ்.வீதி,
இணுவில் (வைத்தியசாலை முன்பாக)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 11 1982

மறைவு 01 07 2005



செல்வி

## திருபாலசிங்கம் சோபனா

அன்பின் இலக்கணமாகத் திகழ்ந்தவளே!
ஆற்றல்பல தன்னகத்தே கொண்டவளே!
இலண்டன் மாநகரில் வாழ்வுதேடி நீ சென்றாய்!
ஈன்றதாயு முடன்பிறப்பும் தவிக்கிறதே மாண்டு நான்காய்
உன்வாழ்வு ஒளிமய மானதாகுமென நாம்நினைக்க...
ஊராளு முன்னுயிரைப் பறித்தானோ காலனவன்?

*'பழ வீடு', பத்தாவத்தை,*
*இளவாலை.* குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி காராளசிங்கம் ஞானசௌந்தரி

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது நல்லூரில் வசித்தவருமாகிய திருமதி காராளசிங்கம் ஞானசௌந்தரி நேற்று (30.06.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகநாதபிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கனகசபை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற காராளசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தஞானிமாஸ்ரர், இராசம்மா, தங்கம்மா, சீதேவிப்பிள்ளை, நல்லம்மா மற்றும் சிவஞானம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வரதலக்சுமி, ஜெயபாலன் (கனடா), சிறிபாலன் (கனடா),விஜயா (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகாலிங்கம், ஆம்பல் (கனடா), கிருபாளினி (கனடா), சண்முகானந்தராஜா (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.06.2009) செவ்வாய்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ். கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கா.த.மகாலிங்கம்,
இல.37/4, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்



மூளாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் (28.06.2009) ஞாயிற்றுக் கிழமை மரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், ஈஸ்வரியின் பாசமிகு கணவரும், சற்குணராசா (டோகா), சற்குணதேவி (அமரர்), விக்னராசா (அமரர்), விக்னேஸ்வரி வசந்தாதேவி, சுதந்தாதேவி (ஆசிரியர், யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலசோதி, உதயகலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கேசவன், சிறிமீரா, ரஜிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2009) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்..

*மூளாய் மேற்கு,*
*சுழிபுரம்.*

தகவல்: குடும்பத்தினர்.

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் கணித, விஞ்ஞான மன்றம் நடத்தும் வருடாந்த கணித, விஞ்ஞானக் கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தரம் 9 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களின் கணித, விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் இக்கண்காட்சி நடத்தப்படவுள்ளது. இதில் அயற்பாடசாலைகளின் மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-203)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 1

சுவாமி விவேகானந்தரின் 'எழுந்திரு, விழித்திரு, கருதிய கருமம் கைகூடும் அயராது உழை' என்னும் தலைப்பிலான கண்காட்சி இன்று முற்பகல் 10 மணிக்குத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் கண்காட்சியை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார். (1-203)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 1

உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான வேலை வாய்ப்புத் தொடர்பான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத்தில் பதிவுகளை மேற்கொண்டவர்களும், இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்களும் சமுகமளிக்குமாறு மேற்படி சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (201)


**இப்போது மானிப்பாயில் உங்களுடன்...**

★ குறைந்த கட்டணத்தில் அடையாள அட்டைப் படங்களை படம் பிடித்திடவும்-
★ மிக விரைவில் பிரதியாக்கம் செய்து கொள்ளவும்.

**மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்**
*யாழ்.வீதி, மானிப்பாய்.*


## மரண அறிவித்தல்கள்

### நடேஸ்வரராஜன் தயாநிதி (தயா)

அரியாலை, 41/6, இலந்தைக்குளம் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட நடேஸ்வரராஜன் தயாநிதி நேற்று (30.06.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கனகரத்தினம் - தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் நடேஸ்வரராஜனின் (ஈசன்) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/6. இலந்தைக்குளம் வீதி.
அரியாலை.

தகவல்: நடேஸ்வரராஜன் (கணவர்).

### தம்பிராசா வேலாயுதபிள்ளை



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா வேலாயுதபிள்ளை கடந்த திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் தம்பிராசா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், கபிலன் (மாணவன், யாழ். மத்திய கல்லூரி), குகன் (மாணவன், யா/ அத்தியார் இந்துக் கல்லூரி), பவிதாசன் (மாணவன், நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கந்தசாமி - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், அன்னம்மா, நடராசா, தங்கம்மா, பரமேஸ்வரி, பிறைசூடி, ஜெயகௌரி ஆகியோரின் சகோதரனும், சேகர், கௌரிதேவி, சுமதி (ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2009) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
*நீர்வேலி.*

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### நடராசா கனகரத்தினம்

(ஸ்தாபகர், கஜன் குறூப், திருநெல்வேலி, முன்னாள் பெருந் தோட்ட மேற்பார்வையாளர், தலவாக்கொல்லை, Founder of ANVIL)



ஆடியபாதம் வீதி, அரசடி அம்மன் கோயிலடி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கனகரத்தினம் நேற்று (30.06.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், சுதாகர், கண்ணன், காலஞ்சென்ற சந்தர் மற்றும் கவிதா, கதீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நாகேஸ்வரியின் பாசமிகு மாமனாரும், கனகலிங்கம், சோமசேகரம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2009) புதன் கிழமை நண்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"The Nest", Arasady Amman Kovil view,**
**Adiyapatham Road, Thirunelvely.**

தகவல்: குடும்பத்தினர்.

### கந்தையா தனகேஸ்வரி



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் சோடாக்கம்பனி ஒழுங்கை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனகேஸ்வரி நேற்று (30.06.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி அரியநாயகத்தின் அன்புச் சகோதரியும் பஞ்சனாதேவியின் அன்புத் தாயாரும் மனோரஞ்சிதனின் (சிமெந்து கூட்டுத்தாபனம், லஷ்சுமி போட்டோ, சுன்னாகம்) அன்பு மாமியாரும் லதாங்கினியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2009) புதன் கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோடாக் கம்பனி ஒழுங்கை,*
*மல்லாகம்.*

தகவல்: மனோரஞ்சிதன் (மருமகன்).

### திருமதி தவேந்திரன் தவமணி (மணி)



தாவளை, இயற்றாலை, வரணியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தவேந்திரன் தவமணி (மணி) 29.06.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை தவேந்திரனின் (வைரமுத்து) அன்பு மனைவியும் தர்மினி (சுதா), ரஜினிகாந் (கண்ணன் - நோர்வே), சுதாஸ்கரன் (பிரபா) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பருத்தித்துறை வீதி,*
*எருவன், கொடிகாமம்.*
*தொ.பே: 0773570833*

தகவல்: சுதாஸ் (பிரபா) மகன்.

### கார்த்தி யோசேப்

(ஓய்வுபெற்ற பரிசாரகர், யாழ்.வைத்தியசாலை)



கொத்தியவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் மல்வம், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தி யோசேப் நேற்று (30.06.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அக்கினேசின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செலஸ்ரீனா மற்றும் சசிகுமார் (பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் அன்பு தந்தையும் கதிரமலை (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்), சிவாஜினி ஆகியோரின் மாமனாரும் மனோராஜ், சசில்டா, டிலக்ரீனா ஆகியோரின் பேரனும் மனோன்மணி, பூபாலசிங்கம், பூமணி ஆகியோரின் சகோதரனும் மேரி அலிஸ், மரியராஜேஸ்வரி, ஜசிந்தாமலர், அமலோபவம், பற்றிமாநாயகி, அன்ரன்ராசா, அன்ரன்புஸ்பராஜா (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (01.07.2009) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று மல்வம் திருக்குடும்ப மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் மல்வம் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மல்வம்,*
*உடுவில்.*

தகவல்: சசிகுமார் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடதாசி உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நாவாந்துறையில் நிறுவுவதற்கு ஏற்பாடு

## இதற்கென நிபுணர்கள் குழு யாழ்.வந்துள்ளது

நல்லூர், ஜூலை 1

நாவாந்துறையில் கழிவுக் கடதாசிகளில் இருந்து கடதாசி உற்பத்தி செய்யும் கைத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவுள்ளது. கைத்தொழில் அபிவிருத்திச் சபை யு.என்.டி.பி.யின் உதவியுடன் மேற்படி தொழிற்சாலையைத் திறக்கவுள்ளதாகவும் இதற்கென யு.என்.டி.பி. 3 மில்லியன் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளதாகவும் யாழ். மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஜெயமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

இந்தத் தொழிற்சாலைக்கான இயந்திரங்கள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன. அதனைப் பொருத்தும் வேலைகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. ஏற்கனவே கொழும்பில் பயிற்சி பெற்ற பத்துப் பேர் இங்கு பணியினை மேற்கொள்ளவுள்ளனர். அவர்களுடன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்து கொண்டு மேலும் சிறப்பான பயிற்சிகளைப் பெறுவதன் மூலம் சிறுகைத்தொழில்கள் மூலம் தமது வருமானத்தை அதிகரிக்க வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான கட்டடம் மீளத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இயந்திரம் பொருத்தும் வேலைகள் 20 தினங்களில் குறிப்பிட்ட வேலைகள் பூர்த்தியடைந்துவிடும்.

இந்தப் பணிகளைத் துரிதமாக்கும் பொருட்டு இது தொடர்பான வல்லுநர் திலக் பெரேரா, வேலைத்தலப் பொறியியலாளர் எஸ்.எஸ்.பிரேமசிறி, மேலதிகாரி எம்.ஜோதிபால, ஆய்வுகூட உத்தியோகத்தர் எம்.பி. சொய்சா ஆகியோர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

கடதாசியில் இருந்து பல்வேறு வகையான பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய வாறான தொழில்நுட்பப் பரிமாற்றங்களை இந்த நிபுணர்கள் வழங்கவுள்ளதால் பாஷையூர், நாவாந்துறைப் பகுதிகளைச் சேர்ந்த 15 முதல் 20 வரையானோர் கலந்து கொண்டு மேலும் பயிற்சிகளைப் பெறமுடியும்.

யாழ்.வந்துள்ள தொழில்சார் நிபுணர்கள் 20 தினங்கள்வரை இங்கு தங்கி சிறு கைத்தொழில் குறித்த பலதரப்பட்ட தொழில் முயற்சிகளுக்கான சந்தேகங்களைத் தீர்க்கவும் அவை குறித்த ஆலோசனைகளை வழங்கவும் தயாராக உள்ளனர்.

எனவே இடத்துக்கிடம் தூக்கிச் செல்லக் கூடிய உமியும், மரத்தூளையும் பயன்படுத்திப் பாவிக்கக் கூடிய சிறு போறனை' உட்பட பானை, சட்டி மற்றும் நில ஓடுகள் செய்வதற்கான இயந்திர உபகரணங்கள், மெழுகுதிரி, சவர்க்கார அச்சுக்கள், யோக்கட் கப் மற்றும் உணவு சம்பந்தமான பழரசங்கள், தும்பு போன்றவற்றைத் தயாரிக்கும் இயந்திரங்களைப் பாவிக்கும் முறைகள் குறித்த விடயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் யாழ்.வீடமைப்புத் திணைக்களக் கட்டடத் தொகுதியில் (யாழ்.செயலகத்துக்கு அண்மையில்) அமைந்துள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு நேரடியாக வருகைதந்து பயனடையமுடியும் - என்றார்.

(50-111)

# வலிகாமம் கல்வி வலயத்தின் கணித விஞ்ஞானப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வலிகாமம் கல்வி வலய கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டி எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கோட்ட மட்டப் போட்டிகளில் உடுவில் கோட்டத்துக்கான போட்டி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், தெல்லிப்பழைக் கோட்டத்துக்கான போட்டி மல்லாகம் மகா வித்தியாலயத்திலும், சண்டிலிப்பாய் கோட்டத்துக்கான போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், சங்கானைக் கோட்டத்துக்கான போட்டி வட்டு இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கான போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

பாடசாலை மட்டப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட தலா ஒவ்வொரு மாணவர் இப்போட்டிகளில் பங்குபற்ற முடியுமெனவும், 6முதல் 11 வரையான தரங்களுக்கு இப்போட்டி நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-38)

# இ.போ.ச.பணியாளர்களுக்கான தொழிற்சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வட பிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பணியாளர்களுக்கான தொழிற்சங்கம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்துக்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மேற்படி அங்குரார்ப்பண நிகழ்வில் யாழ்.குடாநாட்டில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சேவையைத் தொடர்ந்து வருகின்ற இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.ஊழியர்கள் முகங்கொடுத்து வருகின்ற சிரமங்கள், குறைபாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

அனைத்துப் பிரச்சினைகளையும் நடைமுறைச் சாத்தியமான வழியில் அணுகித் தீர்ப்பதற்கு ஏதுவாக வட பிராந்திய போக்குவரத்துச் சபைப் பணியாளர்களின் தொழிற்சங்கத்தை உருவாக்குவதன் மூலம் நிர்வாக ரீதியில் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். அந்த அடிப்படையில் இந்தத் தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கத் தலைவராக ந.கெங்காதரனும் செயலாளராக செ.பிரேமதயாளனும் பொருளாளராக கமலேஸ்வரனும் மற்றும் போஷகர் உட்பட 13 பேர் மேற்படி சங்கத்தின் நிர்வாக சபைக்குத் தெரிவாகியுள்ளனர்.

ஊழியர்களுக்கும் நிறுவனத்துக்கும் இடையில் கௌரவமான தொடர்புகள் இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி சங்கச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக 25 ஆயிரம் ரூபா நிதியை சங்கத் தலைவரிடம் கையளித்துள்ளார்.

(50)

# தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

அறவழி போராட்டக் குழுவின் தொழில் பயிற்சி சபையினர் இரண்டு புதிய தொழிற் பயிற்சியினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

கையடக்கத் தொலைபேசி திருத்தம், புத்தகம் கட்டுதல் ஆகிய பயிற்சி நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் தென்மராட்சி பிரதேச இளைஞர் யுவதிகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறவழி நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

(50 - 207)

# உள்ளூராட்சிவார நிகழ்வுகள் 9ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 1

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் இவ்வருட உள்ளூராட்சி வார நிகழ்வுகளை எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

# பவள் - சைக்கிள் விபத்து; வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை 1

கைதடி - நுணாவில் சந்திக்கு அருகில் கடந்த 28ஆம் திகதி 11.30 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டார்.

வயோதிபர் சென்று கொண்டிருந்த சைக்கிளும் வீதியால் வந்துகொண்டிருந்த படையினரின் 'பவள்' கவசவாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின.

உடல் நசிந்து அந்த இடத்திலேயே கொல்லப்பட்ட பிரஸ்தாப வயோதிபரின் சடலம் நேற்று மாலை வரை இனங் காணப்படவில்லை.

வயோதிபரை மோதிய பவள் வாகனம் அருகில் இருந்த காவலரணையும் உடைத்து 100 மீற்றர் தூரத்தில் உள்ள பனை மரத்துடன் மோதி நின்றதாக தெரிவிக்கப்பட்டது.

சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (1-207-78)

# யாழ்ப்பாணக் கல்லூரியின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 1

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, யாழ்.பல்கலைக்கழக ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தகுமாரி விக்னராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (201)




# பரிசளிப்பு விழாக்கள்

குருநகர், ஜூலை 1

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9மணிக்குக் கல்லூரி யின் மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ் போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை ஆலோசகர் டாக்டர் எஸ்.இராஜேந்திரா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(201- 51)

# நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை1

ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களின் பாடத்திட்டத்தில் அடங்கும் 'கம்பராமாயணம் - கைகேயி சூழ்வினைப்படல உரைநூல்' வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 11.30மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

திருமதி ஓம் சக்தி யசோதனால் எழுதப்பட்ட இந்நூலின் வெளியீட்டு விழாவிற்கு புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை ம.ஜெறோசெல்வநாயகம் தலைமை தாங்குவார்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தமிழ் விரிவுரையாளர் கலாநிதி சி.திருநாவுக்கரசு கலந்துகொள்வார்.

வெளியீட்டுரையை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ. ரவீந்திரனும் ஆய்வுரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் பா. மகாலிங்கசிவமும் நிகழ்த்துவர்.

முதற்பிரதியை தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் வி.அருளானந்தம் பெற்றுக்கொள்வார்.

(203- 55)

# நலிவுற்றோருக்கான ஜூன் மாதத்துக்குரிய நிவாரண விநியோகம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை1

உலக உணவுத் திட்டத்தின் கீழ் நலிவுற்றோருக்கான ஜூன் மாதத்துக்குரிய நிவாரண விநியோகம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றது.

அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவை இந்த நிவாரணத்தில் வழங்கப்படவுள்ளன.

இந்த நிவாரண விநியோகத்தை இன்று முதலாம் திகதி ஆரம்பிக்குமாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் யாழ்.செயலகம் கேட்டுள்ளது.

குடும்ப உறுப்பினர்களின் அடிப்படையில் நிவாரண விநியோகவிவரம் பின்வருமாறு:

| பொருள் விபரம் | 1 அங்கத்தவர் | 2 அங்கத்தவர் | 3 அங்கத்தவர் | 4 அங்கத்தவர் | 5 அங்கத்தவர் | 6 அங்கத்தவர் | 7 அங்கத்தவர் | 8 அங்கத்தவர் | 9 அங்கத்தவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி (கிலோ கிராம்) | 5.600 | 11.200 | 16.800 | 22.400 | 28.000 | 33.600 | 39.200 | 44.800 | 50.400 |
| கோதுமை மா (கிலோ கிராம்) | 5.600 | 11.200 | 16.800 | 22.400 | 28.000 | 33.600 | 39.200 | 44.800 | 50.400 |
| பருப்பு (கிலோ கிராம்) | 1.680 | 3.360 | 5.040 | 6.720 | 8.400 | 10.080 | 11.760 | 13.440 | 15.120 |
| சீனி (கிலோ கிராம்) | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 | 3.360 | 3.920 | 4.480 | 5.040 |
| மரக்கறி எண்ணெய் (லீற்றர்) | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 | 3.360 | 3.920 | 4.480 | 5.040 |
| மொத்தம் | 14.000 | 28.000 | 42.000 | 56.000 | 70.000 | 84.000 | 98.000 | 112.000 | 126.000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 150 பேருடன் புறப்பட்ட யேமன் விமானம் கொமொரொஸ் தீவகக் கடலில் விழுந்து விபத்து

## இதர விவரங்கள் வெளியாகவில்லை

மொரோனி, ஜூலை 01

150பேருடன்புறப்பட்ட யேமன்விமானமொன்று இந்து சமுத்திரத்திலுள்ள கொமொரொஸ் தீவுக் கூட்டங்களுக்கப்பால் கடலில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. செவ்வாய்க்கிழமை அதி காலை இவ்விபத்து சம்பவித்துள்ளது என சிரேஷ்ட அரச அதிகாரியொருவர் தெரிவித்தார்.



விபத்துக்குள்ளான விமானத்தில் பயணித்தவர்களின் உறவினர்கள், தகவலறிவதற்காக விமான நிலையத்தில் கவலையுடன் காத்திருக்கிறார்கள். இவ்விமானத்திலிருந்த 150 பேரில், 66 பேர் பிரான்ஸ் நாட்டினர் என தெரிய வந்துள்ளது.

''இந்த விமானத்தில் 150 பேர் இருந்துள்ளனர். இவர்களின் கதி என்ன என்பது குறித்து உடனடியாக எதுவும் கூற இயலாது'' என கொமொரொஸ் துணை ஜனாதிபதி இடி நட்ஹோயிம் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

கொமொரொஸின் தலைநகரான மொரொனியிலுள்ள விமான நிலையத்திலிருந்து தொலைபேசி மூலமாக இவர் இத்தகவலை வெளியிட்டார். இந்த விபத்து செவ்வாய்க்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ளமை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட துணைஜனாதிபதி இதர விவரங்களை வெளியிட முன்வரவில்லை.

''விபத்து நடத்துள்ளது. கடலில் விபத்து நடந்துள்ளது'' என ஒருவர் மொரொனியிலுள்ள யேமன் அலுவலகமொன்றிலிருந்து தொலைபேசி வாயிலாக ரொய்ட்டருக்குத் தெரிவித் தார். இவரும் இதர விவரங்களை வெளியிடவில்லை. அத்துடன்தம்மை அடையாளப் படுத்திக் கொள்ளவும் முன்வரவில்லை.

ஏமானியா என்னும் இந்த பயணிகள் விமானம் 51 சதவீதம் யேமன் அரசுக்கும், 49 சதவீதம் சவூதி அரேபிய அரசுக்கும் சொந்தமானது என இதன் இணையம் தெரிவித்துள்ளது.

''இவ்விமானம் விழுந்து விபத்துக்குள்ளான இடம் உடனடியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. விபத்து நிகழ்ந்த செய்தி வெளியானதும், உள்ளூர் வைத்தியசாலை உடனடியாக கடமைக்கு திரும்புமாறு எனக்கு அவசர அழைப்பு விடுத்தது'' என மிட்சமியோலி நகர வைத்தியசாலை ஊழியரொருவர் தெரிவித்தார்.

''விமானமொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. உடனடியாக வைத்தியசாலைக்கு வரவும் என வைத்தியசாலை நிர்வாகத்திடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. வைத்தியசாலைக்குத் திரும்பினேன். காயமடைந்தவர்கள் இங்கு கொண்டு வரப்படலாம். எங்கும் ஒரே பரபரப்பு நிலவு கிறது'' என்றும் அவர் ரொய்ட்டருக்கு மேலும் தெரிவித்தார்.

''இந்த விமானம் கடலில் விழுந்திருக்கலாம். எனினும், கடலில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கான வசதிகள் எம்மிடம் கிடையா'' என கொமொரன் பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

கிரேண்டி கொமொரி, அன்சோயுன், மோஹினி என்னும் மூன்று தீவகங்களை கொமொரொஸ் உள்ளடக்கியுள்ளது. மொசாம்பிக்கின் தலைநகரான மடகஸ்காருக்கு வடமேற்கே, 300 கிலோ மீற்றர் (190 மைல்) தொலைவில் இத்தீவகங்கள் அமைந்துள்ளன.

# தலிபான்களுடனான பேச்சுக்கு இனி ஒருபோதும் இடமில்லை

## பாகிஸ்தான் பிரதமர் கிலானி திட்டவட்டம்

இஸ்லாமாபாத், ஜூலை 01

''நாட்டில் சட்டம், ஒழுங்கு, இயல்புநிலை ஆகியவற்றை சீர்குலைத்து இரத்தக்களரிகளுக்கு வித்திட்டுவரும் தீவிரவாதிகளுடன் பேச்சுகள் நடத்தப்படமாட்டா'' என பாகிஸ்தான் பிரதமர் கிலானி, பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஜாமியா உலேமா இ-இஸ்லாம் கட்சித் தலைவர் பஸ்லுர் ரஹ்மான், அரசு, தலிபான்களுடன் பேச்சுகள் நடத்தவேண்டு மென அறிக்கையொன்றின் வாயிலாகக் கோரியுள்ளாரே என பிரதமரிடம் ஒரு கட்டத்தில்வினா தொடுக்கப்பட்டது.

இதற்குப் பிரதமர் பதிலளிக்கையில், ''பஸ்லுரி ரஹ்மான்ஸி'' எங்கள் கூட்டணிக் கட்சியின் தோழர். அவர் தலிபான்களுடன் பேச்சுகள் நடத்தவேண்டும் எனக் கூறியுள்ளார். இது அவரது சொந்தக் கருத்து. எனினும், தலிபான் தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டி, அமைதியை நிலைநாட்ட வேண்டுமென பாகிஸ்தான் மக்கள் ஒட்டு மொத்தமாக குரலெழுப்பி வருகிறார்களே'' என்றார்.

''பாகிஸ்தான் மக்கள் பார்வையில் தீவிரவாதிகள் பாகிஸ்தானின் எதிரிகளாவர். அப்படியே நாமும் கருதுகிறோம். தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிரான அதிரடி இராணுவ நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன'' என்றும் பிரதமர் கிலானி சுட்டிக்காட்டினார்.

''தலிபான்களோடு பேச்சுகள் நடத்தவேண்டிய தருணம் இதுவல்ல. அவர்களை நசுக்குவதற்கான தருணமாகுமிது. ஸ்வாத், மலாக்கண்ட் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகள் விரைவில் முடிவுக்கு வரும். தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குளிருந்த பெரும்பாலான பகுதிகள் மீட்கப்பட்டு, அவர்கள் விரட்டப்பட்டுள்ளார்கள்'' என்றும் அவர் கூறினார்.

# ஆப்கான் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மாகாண பொலிஸ் அதிபர் உட்பட 10 பேர் பலி

## தனியார் நிறுவன 41 பாதுகாவலர்கள் கைது

காபூல், ஜூலை 01

''ஆப்கானின் கந்தஹார் மாகாணத்திலுள்ள அரசு வழக்குத் தொடுநரின் அலுவலகக் கட்டடத்திற்குள் நுழைந்த பாதுகாவலர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக 41 பாதுகாவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்'' என பிராந்திய ஆளுநர் தொரியலாய் வெஸா தெரிவித்தார்.

''துப்பாக்கிப் பிரயோகத்தில் மாகாண பொலிஸ் அதிபர் மடியுல்லா காட்டே, குற்றவியல் விசாரணைத் திணைக்களத் தலைமையதிகாரி அப்துல் காலிஜ் ஹம்தாம் ஆகியோரும், இதர எட்டுப் பொலிஸாரும் கொல்லப்பட்டுள்ளனர்'' என்றும் அவர் விவரித்தார்.

''இந்த பாதுகாவலர்கள் அமெரிக்கப் படையினரால் பயிற்சியளிக்கப்பட்டு, பாதுகாப்புப் பணியில் அமர்த்தப்பட்டவர்கள். வழக்குத் தொடுநரின் அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்துக்குள் தடுத்துவைக்கப்பட்டுள்ள தங்களின் சகாக்களை விடுவிப்பதற்காக இப்பாதுகாவலர்கள், கட்டடத்துக்குள் பிரவேசித்துள்ளார்கள்'' என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

''உட்பிரவேசித்த பாதுகாவலர்களை பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரும், குற்றவியல் விசாரணைத் திணைக்கள பாதுகாவலர்களும் தடுத்துள்ளார்கள். அச்சமயத்தில், அவர்களை நோக்கி, உட்புகுந்த பாதுகாவலர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார்கள்'' என்றும் அவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''இத் துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக 41 பாதுகாவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் விசாரணைக்காக தென் மாகாணத்திலிருந்து தலைநகரான காபூலுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளார்கள்'' என்றும் பிராந்திய ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ''இது பெரிதும் கண்டிக்கப்படத் தக்க ஒரு செயல். அரச நிர்வாகக் கட்டடமொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதல்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கர்சாயின் செயலகம் இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில், ''கந்தஹாரிலுள்ள தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்றைச் சேர்ந்த ஆயுததாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு குற்றவாளிகளை மீட்க முயன்றுள்ளார்கள். அதன்பொருட்டு உள்ளூர் அரச வழக்குத் தொடுநரின் செயலகம் அமைந்துள்ள கட்டடத்தைத் தாக்கியுள்ளார்கள்'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

''கந்தஹார் பொலிஸ் அதிபரும், குற்றவியல் விசாரணைத் திணைக்களத் தலைமை அதிகாரியும் இந்த பாதுகாவலர்களைத் தடுத்துள்ளார்கள். இதையடுத்து, இவ்விருவரையும் சுட்டுக்கொன்றுவிட்டு, துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறே முன்னேறியுள்ளார்கள்'' என்றும் அதில் விவரிக்கப்பட்டுள்ளது.

# ஜக்ஸனின் இறுதிச் சடங்கு இன்று

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜூலை 01

மைக்கல் ஜக்ஸனின் இறுதிச் சடங்குகள் தொடர்பாக அவரது குடும்பத்தினர் ஆலோசனை நடத்தி வருகின்றனர். இது பற்றி அவரது குடும்ப நண்பர் ஒருவர் கூறுகையில், ''மைக்கல் ஜக்ஸனின் இறுதிச் சடங்குகள் (இன்று) புதன்கிழமை நடைபெறும். அவருக்குச் சொந்தமான பிரபல நெவர்லேண்டு பண்ணை வீட்டில் மைக்கல் ஜக்ஸன் உடல் அடக்கம் செய்யப்படும்'' எனத் தெரிவித்துள்ளார்.

மைக்கல் ஜக்ஸன் அடுத்த மாதம் லண்டனில் 50 இசை நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டிருந்தார். இந்த இசை நிகழ்ச்சியை நடத்தும் நிறுவனம்தான், மைக்கல் ஜக்ஸனுக்குக் கடைசியாக ஊசி போட்ட டாக்டர் கோன்ராடு முரேயை 11 நாள்களுக்கு முன்னர் நியமித்திருந்தது.

அந்த டாக்டர் மீது சந்தேகம் இல்லை என்று பொலிஸார் கூறியபோதிலும், மைக்கல் ஜக்ஸன் குடும்பத்தினர், அந்த டாக்டரிடம் பல கோடி நஷ்டஈடு கோரி வழக்குத் தொடரத் தீர்மானித்துள்ளனர்.

''உணவு சாப்பிடுதல், மது உள்ளிட்ட நீர் ஆகாரங்களை அருந்துதல் ஆகியவற்றை மைக்கல் ஜக்ஸன் மிக அரிதாகவே மேற்கொள்வார். அவர் பெரும்பாலும் மாத்திரைகளையும், போதை ஊசிகளையுமே பயன்படுத்தி வந்தார்'' என அவருக்கு நெருக்கமான நண்பரொருவர் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கமுத்து சின்னத்துரை



பாலாவி தெற்கு, கொடிகாமத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் பெரியமாவடி, சாவகச்சேரியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து சின்னத்துரை (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா சின்னத்துரையின் அன்பு மனைவியும் துரைசிங்கம், தனபாலசிங்கம் (சின்னண்ணா), இரத்தினசிங்கம் (குஞ்சுகிளி), சுசீலாதேவி (ஆசிரியை, யா/கச்சாய் அ.த.க பாடசாலை), செந்தி, குணம், வசந்தன், ரகு ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசந்தலீலா, புவி, மலர், நாதன், சாந்தி, பாமா ,ரஜி,பிரதீபா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2009) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலாவி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பேரப்பிள்ளைகள்:
தனபாலசிங்கம் அஜீதா,
ஜெகநாதன் சுஜீத்தா,
(யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருடமாணவிகள்).

பெரியமாவடி,
சாவகச்சேரி.


## பெண் பணியாளர் தேவை

லிகிதர் பதவிக்கும், போட்டோ பிரதி எடுப்பவர் பதவிக்கும் ஆங்கில அறிவுள்ள, 30 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் தேவை. யாழ்.நகர், கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்தோர் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் இம் மாதம் ஏழாந் திகதிக்கு முன் அனுப்பப்படல் வேண்டும்.
விளம்பர இலக்கம்: 1014
சே/பா உதயன், யாழ்ப்பாணம்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி
அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரியும்
சி.சிவகணேசமூர்த்தி அவர்களின் அன்புத் தந்தை

**வேலுப்பிள்ளை சின்னத்தம்பி**

அவர்கள் 01.06.2009 அன்று இறைபதமடைந்துள்ளார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
கரவெட்டி.

பிரதேச செயலரும், அனைத்து
உறுப்பினர்களும்,
உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்.


கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி

**Diploma in Computerized Accounting**

உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான
100% செய்முறைப்பயிற்சியுடன்..

சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான
Quick Book + ACCPAC + MYOB
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

Tally
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.

Batch I :02/07/2009 11 am
Batch II :04/07/2009 11 am
Batch III :05/07/2009 11 am

COMPUTER EXPRESS
Head Office : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250



**Advanced Diploma In Hardware & Networking**

உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும்
சுய தொழில் வாய்ப்புக்களை
உருவாக்கும் தொழில்சார் பயிற்சி

புதிய பிரிவுகள் ஆரம்பம் :
01.07.2009,04.07.2009 மற்றும் 07.07.2009
Duration : 2 Months

**Tally 9**
CERTIFIED COMPUTER ACCOUNTANT
Tally India நிறுவனத்தால் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே பயிற்சி மையத்தில் இணைந்து சர்வதேச அங்கீகாரம் பெற்ற Tally சான்றிதழைப் பெற்றிடுங்கள்.
Duration : 2 Months

ASIAN - CSC COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021-222 5677

கிளை : கொடிகாமம் வீதி,
நெல்லியடி.
077-3122198


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்புப் பழக்கம் அதிகரிப்பதன் மூலமே இலக்கியச் சூழல் வளர்ச்சி காண வழிபிறக்கும்

*சிறுகதை, கவிதை, சிறுவர் பாடல்கள், மேடை நாடகம், விமர்சனம் எனப் பல துறைகளில் தமது எழுத்தாற்றலை வெளிப்படுத்தியிருப்பவர் எழுத்தாளர் மாவை வரோதயன். சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன் என்ற இயற் பெயர் கொண்ட இவர் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உதயன், சஞ்சீவிப் பத்திரிகையில் இவரது ஆக்கங்கள் பல வெளியாகியுள்ளன. தற்போது தீராத நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் இவர் உதயனுக்கென வழங்கிய பேட்டி இது:*

கேள்வி: *உங்களுக்கு இலக்கியத் துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?*

பதில்: எனது தந்தை சிவகடாட்சம் பிள்ளை ஈழத்துப் பத்திரிகைகளையும் குமுதம், ஆனந்தவிகடன் முதலான தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளையும் வாங்கிவந்து வாசிப்பார். இதனால் சிறுவயதிலேயே எனக்கு அவற்றை வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தந்தை சந்தர்ப்பத்திற்கேற்ப கட்டுரை, சிறுகதை, மேடைநாடகம் என்பவற்றை எழுதி வந்ததும் எனது சித்தப்பா பளையூர் பாலசுந்தரம்பிள்ளை என்னும் புனைபெயரில் எழுதிவந்தமையும் எனக்குத் தமிழ் இலக்கியத்துறையில்ஆர்வம் ஏற்படக் காரணமாயின. சிறுவயதில் தேவாரப் பதிகங்களை விரைவாகப் பாடமாக்குவதற்காக எதுகை, மோனைகளைக் கவனித்துப் பாடமாக்கினேன். இதனால் காலப்போக்கில் எனக்கு கவிதை எழுதும் திறமை வந்தது. நான் சிறுவனாக இருந்த காலத்திலேயே இலங்கை வானொலியில் சிறுவர் நிகழ்ச்சியில் கவிதைகள் மற்றும் நிகழ்ச்சிகள் குறித்த விமர்சனங்களை எழுதிவந்தேன். இலங்கை வானொலியும் எனது இலக்கியத்துறை வளர்ச்சிக்குக் காரணமாகியது. எழுத்தாளர் வேல்அமுதனும் முக்கியமான ஒரு வழிகாட்டி.

கே: *நீங்கள் என்னென்ன இலக்கியத் துறையில் ஈடுபட்டிருந்தீர்கள்? எத்தனை நூல்கள் வெளிவந்துள்ளன?*

ப: நான் பெரும் எண்ணிக்கையிலான கவிதைகளையும், சிறுவர் பாடல்களையும், நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும், மேடை நாடகம், விமர்சனக் கட்டுரைகள் என்பவற்றையும் எழுதியுள்ளேன். சிறுகதைகள் 'வேப்பமரம்' என்னும் தொகுதியாகவும், கவிதைகள் 'இன்னமும் வாழ்வேன்' என்னும் தொகுதியாகவும், சிறுவர் கவிதைகள் 'ஒற்றுமையாய் ஆடுவோம்' என்னும் நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளன. உதயன் சஞ்சீவி, வீரகேசரி, தினகரன் முதலிய பத்திரிகைகளிலும் ஈழத்துச் சஞ்சிகைகளிலும் விமர்சனக் கட்டுரைகளை எழுதியுள்ளேன். 90 களில் இடம்பெயர்வதற்கு முன்னர் மாவிட்டபுரப் பகுதிகளில் வாழ்ந்த புகழ்பெற்ற சிலரின் ஒருநாள் வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதைத் தாயகம் சஞ்சிகையில் 'வலிகாமத்து மைந்தர்கள்' என்ற தலைப்பில் தொடராக எழுதிவருகின்றேன். புலம்பெயர் தமிழர்களிடம் இருந்தும் இத் தொடருக்குப் பாராட்டுகள் கிடைத்து வருகின்றன.



கே: *கலை கலைக்காகவே, இலக்கியம் என்பது வாசகரிடம் உணர்ச்சியைத் தொற்ற வைப்பது, இலக்கியம், அறக் கருத்துக்களைக் கூறுவது என்பன போன்ற இலக்கியக் கோட்பாடுகளில் உங்களது இலக்கியங்களுக்கு அடிநாதமாக இருக்கும் கோட்பாடு எது?*

ப: இவை மூன்றும் உண்மையானவையே. எனது இலக்கியக் கோட்பாடு இவற்றை எல்லாம் ஒன்று சேர்த்து அமைந்தவைதான். கலைக்கூடாக மனிதாபிமானத்தைத் தேடுவது தான் எனது நோக்கமாகத் தோன்றுவதாகச் சிலர் எனது எழுத்துக்களை விமர்சித்துள்ளனர்.

கே: *ஈழத்துச் சஞ்சிகைகளுடன் நீண்டகாலத் தொடர்புடைய நீங்கள் தாயகம் சஞ்சிகை ஆசிரியர் குழுவிலும் இருக்கிறீர்கள். இளம் எழுத்தாளர்களை வளர்த்தெடுப்பதில் அவற்றின் பங்களிப்பு எந்தளவிலானது?*

ப: இளம் எழுத்தாளர்களை இனங் கண்டு ஊக்குவிப்பதில் ஈழத்துச் சஞ்சிகைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. கலை இலக்கியப் பேரவையினூடாகவெளிவரும் 'பயில் நிலம்' சஞ்சிகைக்கான ஆக்கங்களைச்சேர்த்தல், எழுதுதல், வெளியீடு, விற்பனை எல்லாம் இளம் எழுத்தாளர்களாலேயே மேற்கொள்ளப் படுகின்றன.

கே: *இலக்கிய மன்றங்கள், சங்கங்கள் ஊடாக நீங்கள் முன்னெடுத்த செயற்பாடுகள் எவை?*

ப: நான் கொழும்பு தமிழ்க்சங்கத்தில் ஆட்சிக்குழு உறுப்பினர், தேசிய கலை இலக்கியப் பேரவையின் கொழும்பு மாவட்ட இலக்கியச் செயலாளர் ஆகிய பதவிகளை வகித்து வருகின்றேன். இப் பேரவை மூலம் மாதாந்தம் பூரணை தினங்களில் நூல் வெளியிடும் திட்டத்தின் மூலம் இதுவரை 200 இற்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. எழுத்தாளர் கௌரவிப்பு, நூல் விமர்சனம் என்பனவும் அடிக்கடி இடம் பெற்று வருகின்றன.

கே: *ஈழத்து இலக்கியச் சூழல் மேலும் வளர்ச்சி அடைவதற்கு எத்தகைய பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கருதுகின்றீர்கள்?*

ப: இதற்கு வாசிப்புப் பழக்கம் இன்னும் பல மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும். கணணி, தொலைக்காட்சி முதலிய இலத்திரனியல் ஊடகங்கள்மூலமும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். ஈழத்துச் சஞ்சிகைகள் வாசகர்கள் மத்தியில் பெருமளவில் விற்பனையாகும்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். பத்திரிகை, சஞ்சிகை பேன்றவற்றை இரவல் வாங்கிப் படிக்கும் பழக்கத்தை விட்டு, தமக்கென தனியாக வாங்கி வாசிக்கும் பழக்கம் அபிவிருத்தி அடையச்செய்ய வேண்டும். வாசிப்புப் பழக்கம் அதிகரிப்பதன் மூலம் தான் இலக்கியச் சூழல் வளர்ச்சி அடைய முடியும்.

## தேவாரப் பதிகங்களில் உள்ள எதுகை மோனைகள் தமது கவிதை ஆற்றலுக்கு வித்திட்டதாகக் கூறுகிறார் மாவை வரோதயன்

கே: *உங்களது நோய் பற்றி ஏதாவது கூற விரும்புகின்றீர்களா?*

ப: ஆம் இரவிரவாக இருந்து தொடர்ச்சியாக எழுதியதால் மூளைக்கு வேலை அதிகரித்து மூளையில் தீராத நோய் ஏற்பட்டுள்ளது என்று தனிப்பட்ட முறையில் நான் நினைக்கின்றேன். ************

செவ்வி கண்டவர்:
ம.பா. மகாலிங்கசிவம்.

# ஏனைய மருத்துவ முறைகளால் குணப்படுத்த முடியாத நோய்களை விரைவாகத் தீர்க்கும் தன்மைகள் யுனானி வைத்தியத்தில் உண்டு

**அ**ண்மைக்காலமாக நாட்டில் சுதேச மருத்துவத் துறைகளை அபிவிருத்தி செய்யவும், அவற்றை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்திப் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இலங்கையில் சுதேச வைத்திய முறைகளில் ஆயுள்வேதம், சித்த மருத்துவம் போன்று யுனானி வைத்தியமும் பிரதான இடத்தைப் பெறுகிறது. அதுவும் இப்போது துரித வளர்ச்சி கண்டு வருகிறது. வைத்திய முறைகளில், வடிவங்களில் செயல் முறைகளில் வேறுபாடு இருப்பினும் அவை மனிதனின் உடல் நலனை சீராக்குவதற்கான முறைகளே.

நவீனமருத்துவம் மூலம் தீர்க்க முடியாத பல நோய்களை யுனானி வைத்திய முறைமூலம் முற்றாகக் குணமாக்கலாம் என்று இங்கு விளக்கப்படுகிறது.

கேள்வி: *யுனானி மருத்துவம் எங்கு தோற்றம் பெற்றது?*

பதில்: மேற்கு வைத்தியத்தின் தந்தை என அழைக்கப்படுகின்ற ''கிப்போகிரடிஸ்'' தோன்றிய கிரேக்க தேசத்தில் தான் யுனானி மருத்துவம் தோற்றம் பெற்றது. ஆனால் ஆங்கில வைத்தியம் மேற்கு நாடுகளில் பரவி பிரபல்யம் அடைந்தது. யுனானி மருத்துவம் அரேபிய நாடுகளில் பரவி பிரபல்யமானது. அதேபோல் ''ஹோமியோபதி'' மருத்துவம் ஜேர்மன் நாட்டிலும், ''அக்கு பஞ்சர்'' மருத்துவம் சீன நாட்டிலும் தேசிய மருத்துவமாக விளங்கியது. ஆயுள்வேத மருத்துவம் வட இந்தியாவிலும், சித்த மருத்துவம் தென் இந்தியாவிலும் தோற்றம் பெற்று விரிவாக்கம் பெற்றன.

கே: *யுனானி மருத்துவம் இலங்கையில் எவ்வாறு அறிமுகமாகியது?*

ப: இது கிரேக்க அரேபிய மருத்துவமாகும். இம் மருத்துவ முறை அரேபியர்களின் இலங்கை வருகையின் பின் அறிமுகமாகி பிரபல்ய மானது. இலங்கையில் தொன்று தொட்டு மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்ற சித்த மருத்துவ, ஆயுள்வேத மருத்துவ முறைகளுக்கு நிகராக யுனானி மருத்துவமும் காணப்படுகிறது. இம் மருத்துவ முறை தற்போதைய நவீன மருத்துவத்திற்கு அப்பாற்பட்ட மருத்துவ வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் ஆங்கிலேயரின் வருகையின் பின்னர் நவீன மருத்துவத்தின் ஆக்கிரமிப்பால் இந்த மருத்துவத்தின் பிரபல்யம் முன்னரிலும் பார்க்க மங்கத் தொடங்கியது.

கே: *ஏனைய மருத்துவ முறைகளில் இருந்து இது எவ் வகைகளில் வேறுபடுகின்றது?*

ப: பொதுவாக ஆங்கில மருத்துவம், நவீன தொழில்நுட்பங்களையும், உபகரணங்களையும் பயன்படுத்தி கூடிய செலவில் செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட மருந்துகளைப் பயன் படுத்துவதன் மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்படும் ஒரு மருத்துவ முறையாகும். இருப்பினும் ஒப்பீட்டளவில் சுதேச மருத்துவ முறைகளான சித்த மருத்துவம், ஆயுள் வேதம், யுனானி மருத்துவம், ஹோமியோபதி மருத்துவங்களில் நவீன தொழில்நுட்ப வசதிகள் குறைவாகவே உள்ளன. அத்துடன் நவீன மருத்துவத்தில் உடனடியாக நோய் நிவாரணம் பெறக் கூடியதாக இருக்கிறது. ஆனால் சுதேச மருத்துவ முறையில் நோயைக்குணப்படுத்த குறிப்பிட்ட கால இடைவெளி தேவைப்படும். இத்தகைய வேறுபாட்டினால் சுதேச மருத்துவம் செல்வாக்குப் பெறத் தவறுகின்றது.

யுனானி மருத்துவம் உட்பட சுதேச மருத்துவ முறைகளில் மருத்துவ மூலிகைகளின் பாகங்களும், அவற்றின் பிரித்தெடுப்புக்களும் நேரடியாக மருத்துவ பொருள்கள் செய்யப் பயன்படுகின்றன. ஆனால் மேற்கத்தேய மருந்துகளில் இரசாயனப் பொருள்கள், நுண்ணுயிர்கள் போன்றன சேர்க்கப்பட்டு சீராக்கம் செய்யப் படுகிறது. இதனால் அவை உடனடி நிவாரணம் தரக்கூடியதாக உள்ளது.

## யுனானி மருத்துவர் டாக்டர் தே.சிவகுமார் யுனானி மருத்துவமுறை குறித்து விளக்குகின்றார்

அக்குபஞ்சர் மருத்துவ முறையில் மருந்துகள் பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக சிறிய ஊசிகள், ஊக்கிகள் போன்றவை பயன்படுத்தப்பட்டு நலிவடைந்த நரம்புகள், தசைகள் என்பன புத்தூக்கப்படச் செய்து மீள ஒருங்கிணைக்கப்படுகின்றன.

இவற்றைத் தவிர கை வைத்தியம், இயற்கை வைத்தியம் போன்றவையும் மூலிகைகளுடன் தொடர்புபட்டவையாகவே காணப்படுகின்றன. அத்துடன் ஹோமியோபதி மருத்துவம் மூலிகைகளுடன் தொடர்புபட்டதாயினும் அவற்றின் மருந்துகள் ஏனைய சுதேச மருந்துகளுடன் ஒப்பிடும் பொழுது அளவிலும், வடிவத்திலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

செவ்வி கண்டவர்
பஞ்சவர்ணன்

கே: *யுனானி மருத்துவ முறையில் காணப்படும் [illegible]?*

ப:பிரதா[illegible] குறிப்பிட இயலும், மேறகத்தைய மருத்து வத்துடன் ஒப்பிடும் பொழுது யுனானி மருத்துவத்தில் இந்த வேண்டத்தகாத பக்க விளைவுகள் இல்லையென்றே கூறலாம். ஏனெனில் இயற்கை மூலிகைகள் பயன்படுத்தப்படுவதே அதற்கான காரணம் ஆகும்.

அடுத்ததாக ''விருப்பப்பாடு'' என்பதைக் குறிப்பிடலாம். மருந்துகளை உட்கொள்ளும்போது பொதுவாக ''அருவருப்பு''த் தன்மை ஏற்படும். பெரும் பாலான யுனானி மருந்துகளில் அடிப்படைப் பதார்த்தமாக் ''தேன்'' பயன் படுத்தப்படுகிறது. இதனால் சிறுவர்கள் முதல் முதியவர் கள் வரை இம் மருந்துகளை அருவருப் பின்றி உள்ளெடுக்கக் கூடியதாக உள்ளது.



மேற்கத்தைய மருந்துவத்தைப் பொறுத் தவரையில் சில நோய்களைக் கட்டுப்படுத்தி வைக்க முடியுமே தவிர, முற்றாகக் குணப்படுத்த முடியாது. ஆனால் யுனானி மருத்துவத் தைப் பொறுத்த வரையில் இவற்றை முற்றாகக் குணப்படுத்த முடியும்.

அடுத்ததாக மருந்துகள் உள்ளெடுக்கும் முறையினைக் குறிப்பிடலாம். மாத்திரை, குளிசை, தூள், லேகியம், எண்ணெய், பத்து எனப் பலதரப்பட்ட வகையில் மருந்துகள் காணப்படுவதால், ஒவ்வொரு நோய்களுக்கும் நோயின் தன்மைக்கு ஏற்பவும், நோயாளியின் விருப்பத்திற்கு ஏற்பவும் சிகிச்சைகள் மேற்கொள்ள இயலும். யுனானி மருத்துவத்தில் உள்ள மற்றோர் அனுகூலம் ''ஒவ்வாமை'' ஆகும். யுனானி மருந்துகளைப் பயன்படுத்தும் போது பெரும்பாலும் 'ஒவ்வாமை' ஏற்படுவதில்லை.

கே: *எவ்வகையான நோய்களுக்கு இது சிறந்த வைத்திய முறையாகக் காணப்படுகின்றது?*

ப: பொதுவாக எல்லா வகையான நோய்களுக்கும் யுனானி மருத்துவத்தில் பரிகாரம் உண்டு. இருப்பினும் ஏனைய மருத்துவமுறை மூலம் குணப்படுத்த முடியாது எனக் கைவிடப்பட்ட நோயாளர் பலா யுனானி மருத்துவத்தின் மூலம் முற்றாகக் குணப்படுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன.

சிறுபிள்ளைகளைத் தாக்கும் தோல், கிரந்தி நோய்கள், தேமல், எக்ஸிமா, சொறஸிஸ், பருக்கள், இளநரை என்பவற்றையும் யுனானி வைத்திய முறையால் குணப்படுத்த இயலும்.

மேலும் பாலியல் சம்மந்தமான பிரச்சினைகள், ஆண், பெண் மலட்டுத் தன்மை, உடற்பருமன், வயிறு எரிச்சல், மூலவியாதி, சிறுநீரகக்கல், சுற்றயல் நாளங்கள் வீக்கம் போன்ற நோய்களுக்கும், நரம்பு தொடர்பான நோய்களுக்கும் யுனானி வைத்திய முறையில் சிறந்த மருந்துகள் உள்ளன.

கே: *இலங்கையில் இதன் செல்வாக்கு எந்த அளவில் உள்ளது?*

ப:யுனானி வைத்திய முறை சுதேச மருத்துவ அமைச்சினால் அங்கீகரிக் கப்பட்டுள்ளது. இலங்கையின் முன்னாள் பிரதமர் மறைந்த S.W.R.D பண்டாரநாயக்காவின் தீவிர முயற்சியால் இம் மருத்துவ முறை புதிய தரத்திற்கு உயர்த்தப்பட்டு இன்றுவரை வளர்ச்சி கண்டு வருகிறது. அதேவேளை தற்போதைய ஜனாதிபதியின் ''மஹிந்த சிந்தனை'' என்ற திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு ''சுதேச மருத்துவ அபிவிருத்தி ஆண்டாக''ப் பிரகடனப்படுத்தப்பட்டும் உள்ளது.

ஆயுள்வேத திணைக்களத்தின் 2008 ஆம் ஆண்டின் புள்ளி விவரம் நாட்டின் மொத்த சனத்தொகையில் 65 வீத மக்கள் சுதேச மருத்துவத்தில் நாட்டம் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள் ளது. இதனை மேலும் பிரபல்யப் படுத்தும் நோக்கில் பிரதேச சபை மட்டத்தில் செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் பாடசாலைக் கல்வித் திட்டத்தின் பாடவிதானத்திலும் சுதேச மருத்துவக் கல்வியை அறிமுகப்படுத்தி விரிவுபடுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில், நாட்டின் பல பாகங்களிலும் பல சுதேச வைத்திய சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் போதனா வைத்தியசாலையின் தரத்தை ஒத்த சுதேசவைத்தியசாலைகள், பொரல்ல (கொழும்பு), நாவின்ன, காலி, கைதடி மற்றும் ஹல்துமுல்ல போன்ற பகுதிகளில் உள்ளன. இவற்றைவிட நாட்டின் பல பாகங்களில் சுதேச மாவட்ட வைத் திய சாலைகளும், மத்திய மருந்தகங்களும் இயங்கி வருவது குறிப்பிடத் தக்கது. ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாகம்- கோட்டைக்காடு
அருள்மிகு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்
**அழகிய சண்டேஸ்வரர் சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா**



விரோதி வருடம் ஆவி 17ஆம் நாள்
**இன்று (01.07.2009)**
**புதன்கிழமை** பிற்பகல் 1.30 மணிக்கு எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற அழகிய சண்டேஸ்வரர் சிற்பத்தேர் வெள்ளோட்டம் நடைபெறும். அடியார்கள் அனைவரையும் வடம்பிடித்து அருள் பெற்றிட வாரீர் என அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய சண்டேஸ்வரர் சிற்பத்தேர் நிர்மாணிப்பு
சிற்ப ஆச்சாரியார் கலாபூசணம்
**சு.இராசரத்தினம்**
**(திருநெல்வேலி).**
**நா.கணேசமூர்த்தி**
**குடும்பத்தினர்.**
கோட்டைக்காடு,மல்லாகம்.
(85987)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
19
★
11
★
1928



மறைவு
01
★
06
★
2009

## அமரர் சின்னவர் ஆறுமுகம் (R.V.G.)

நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமா எம் துயரம்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம் (R.V.G.)
(85976)
உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 1

நல்லூர், செல்லர் வீதியில் உள்ள ஸ்ரீ சிவ பூதராயர் ஆலயம் ஸ்ரீ யமுனாம்பிகா சமேத சிவசங்கரனார் திருக் கோயில் என புதிய நாம கரணம் இடப்பட்டுள்ளது.

பழமை வாய்ந்த இவ்வாலயம் முழுமை யாகப் புனரமைக்கப்பட்டு நாளை வியாழக் கிழமை புனராவர்த்தன அஷ்ட பந்தன ஸப்த சூச குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் நடை பெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (201- 207)

★ ★ ★

வண்ணை, ஜூலை 1

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் நாகவ ரத நாராயணர் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஏகாதசி விரத பூசை நடை பெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8 மணிக்கு விசேட அபிசேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம் பமாகும். காலை 9மணிக்கு சிறப்புச் சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று நாராயணசுவாமி ஸ்ரீ தேவி பூமாதேவி சமேதராய் வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். (201 - 160)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 1

சாவகச்சேரி வாரிவனம் முத்துமாரி அம் பாள் ஆலய மகாகும்பாபிஷேக தினத்தை யொட்டிய சங்காபிஷேகமும், ஆலய வளா கத்தில் நிர்மாணிக்கப்பட்ட மகாகாளி ஆலய மகா கும்பாபிஷேகமும் எதிர்வரும் சனிக் கிழமை காலை 6மணி தொடக்கம் நடைபெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் இன்று புதன் கிழமை ஆரம்பமாகும்.

## கட்டடத் திறப்பு விழா

சங்கானை, ஜூலை 1

சுழிபுரம், காட்டுப்புலம், திருவடி நிலை கெங்காதேவி கடற்றொழிலாளர் கூட்டுற வுச் சங்கத்தின் புனரமைக்கப்பட்ட கட்ட டத் திறப்பு விழாவும் மீன்பிடி உபகரணங் கள் வழங்கலும் இன்று செவ்வாய்க்கிழமை சங்க மண்டபத்தில் மு.ப. 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கடற்றொழில் நீரியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.தர் மலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203-29)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்
இணைய வழிமூலமான வியாபார
முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு (வெளிவாரி)
**BACHELOR OF BUSINESS MANAGEMENT (EXTERNAL)ON LINE PROGRAMME**
**புதிய அனுமதி-2009**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சை கள் அலகினூடாக நடத்தப்படும் தமிழ்மொழி மூலமான மூன்று வருட இணையவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

★ க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதியானவர்கள்

அல்லது

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த.) பரீட்சைக்குச் சமனான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**குறிப்பு:** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப் பொன் றிற்கான பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு:**
விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப் படிவங்களைப் பெறுதல்:**

1. விண்ணப்ப மற்றும் பரீட்சைக்கட்டணமாக ரூபா 250.00 ஐ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்பதிவு கள் மற்றும் பரீட்சை அலகில் செலுத்தி 01.07.2009ஆம் திகதியிலிருந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள் ளலாம்.
2. விண்ணப்பப்படிவத்தை www.jfn.ac.lk/bbm எனும் இணைய முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பித்தல்**
விண்ணப்பங்கள் யாவும் உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்.பல்க லைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இணையவழிமூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு' எனக் குறிப்பிடல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 31.07.2009**
மேலதிக விவரங்களுக்கு 021-2227519, 021-2223610, 021 2223612 என்ற தெலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

29.06.2009 (சி/559284) **பதிவாளர்.**



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சிவக்கொழுந்து மாசிலாமணி

## (உரிமையாளர்- மாசிலாமணி ஆபரண மாளிகை)



தோற்றம்
08
.
04
.
1928

மறைவு
12
.
07
.
2008

அன்பெனும் ஏணி கொண்டு
அனைவரையும் ஏற்றி வைத்து
உன்பணி ஏற்றதென்று
உவகையோடு அதனைச் செய்து
பாருளோர் போற்ற வாழ்ந்து
பாதியிலெம்மைப் பரிதவிக்கவிட்டு
செல்லாத உலகத்திற்குச் சென்று
ஆண்டொன்று ஆனதோ!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உங்கள் பசுமையான
நினைவுகளுடன் நாமிருப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'மணிமலர் பவனம்',
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

**மா.மங்களேஸ்வரன்**
(ரவி- மகன்).

(சி/559288)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவயவங்களை இழந்தோருக்கு ஆதரவளிக்கும் உன்னதமான மனிதாபிமானப் பணியில் ஜெய்ப்பூர்



**யுத்தம், நோய், பிறப்பு மற்றும் ஏனைய காரணிகளால் அங்கவீனர்களாகி, வலுவிழந்து, செயலிழந்து, வாழ்விழந்து நிற்கும் எம் சகோதர உறவுகளை மாற்றுவலுவுடையோராக்கி மண்ணில் வாழ்வாங்கு வாழ வழிவகுக்கும் வகையில், மனிதநேய புனர்வாழ்வுப் பணிகளை ஆற்றி வரும் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் இன்று புதன்கிழமை தனது பணிவாழ்வுப் பயணத்தில் 22 வருட நிறைவைப் பூர்த்திசெய்துள்ளது. நடந்துவந்த பாதையில் செய்துமுடித்த மனிதாபிமானப் பணிச் செயற்பாடுகள் தொடர்பான தனது மனப்பதிவுகள் சிலவற்றை மக்களுடன் பகிர்ந்துகொள்கிறது அந்த நிறுவனம்.**

பல்வேறு காரணங்களால் குறிப்பாக உள்நாட்டுப் போரினால் அவயவங்களை இழந்து பரிதவித்து நின்ற எம்மக்களின் அவலநிலையைப் போக்குவதற்குச் செயற்கை அவயவங்களைத் தயாரித்துப் பொருத்தி அவர்களுக்கு இயல்பு வாழ்வு அளிக்கும் நோக்குடன், அன்னையர் முன்னணி அயராது உழைத்து 01.07.1987இல் கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் (Colombo Friend in-need-society) கிளை நிறுவனமாக யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று சுதந்திரமான தன்னார்வ சேவை நிறுவனமாக இயங்கி வருகின்றது.

இக்கட்டத்தில் எம் நிறுவன உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்த அன்னையர் முன்னணியின் அங்கத்தவர்களை நன்றியுடன் நினைவுகூருகின்றோம். அவர்களின் தூர நோக்குடன் கூடிய மகத்தான பணி, இன்று எம்மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது என்றால் மிகையாகாது. மேலும் இவ்விடத்தில் எமது நிறுவனம் தனது பணியினை ஆரம்பிப்பதற்குத் தேவையான நிதியை வழங்கி எமது நோக்கம் செயல்வடிவம்பெற காரணகர்த்தாவாகிய 'நோராட்' (NORAD) நிறுவனத்தினரையும் நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் இன்று எம் நிலைய முகாமைத்துவ அணியில் முறையே கௌரவ தலைவராக,

## 22ஆண்டுகள் கடந்தும் சளைக்காமல் செயற்படுகின்றது

கௌரவ பொருளாளராகப் பணியாற்றும் வைத்திய கலாநிதிகள் திருமதி ஜே.கணேஷமூர்த்தி, திருமதி செ.தெய்வேந்திரன் ஆகியோர் இந்நிலைய ஸ்தாபக அங்கத்தவர்கள் (Founder Members) என்பதையும் பெருமையுடன் இங்கு கூற விரும்புகின்றோம்.

1987 - 1999 வரையிலான காலப்பகுதியில் எம் நிலையம் பல்வேறு நெருக்கடிகளுக்கு, இன்னல்களுக்கு முகம்கொடுக்கவேண்டி இருந்தது. எனினும் நிறுவனத்தின் முகாமைத்துவ அணியினரின் அயராத, தளராத முயற்சியினால், பல கஷ்டங்கள் மத்தியிலும் நிறுவனத்தின் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

1999ஆம் ஆண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமானது எமது நிறுவனத்திற்கு ஆத



ரவு வழங்க முன்வந்தது. பொலிபுறொபைலின் (Polypropylene) எனும் நவீன தொழில்நுட்பத்தில் அவயவங்களைத் தயாரிக்கும் முறையை அறிமுகப்படுத்தி வைத்தது. இச்செயற்பாடானது எமது நிறுவன வளர்ச்சிப் பாதையில் ஒரு மைல் கல்லாகக் கொள்ளவேண்டிய நிகழ்வாகும். இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் செயற்கை அவயவங்களைத் தயாரிக்கவேண்டிய இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் மூலப்பொருள்களை வழங்கி வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### பணியும் வளர்ச்சியும்

ஆரம்பத்தில் குறைந்தளவு மூலப்பொருள்களுடன் அலுமினியத்தாலான செயற்கை அவயவம் தயாரித்துப் பொருத்தும் பணியுடன் ஆரம்பித்த எமது நிறுவனம், இன்று நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தரமான செயற்கை அவயவங்களையும் (செயற்கைக் கால்கள், செயற்கைக் கைகள்) குறைபாட்டு நிவர்த்திச் சாதனங்களான கழுத்துப்பட்டி, முள்ளந்தண்டு ஆதார உறுப்பு, கலிப்பஸ் (Calipers), விசேட காலணிகள் போன்றவற்றையும் பொருத்தி வருகின்றது.

ஆரம்ப காலத்தைப் போலல்லாது, மேற்கூறியவற்றுக்குத் தேவையான சில உதிரிப் பாகங்களை இன்று எமது நிறுவனமே தயாரிப்பது எமது வளர்ச்சிப் படியின் முக்கிய அம்சமாகும். மேலும் மாற்றுவலு உடையோருக்கான ஊன்றுகோல்கள், நடை உதவு கருவிகள், நடைதாங்கிகள், முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் போன்ற நடமாட உதவும் உபகரணங்களைச் சிறந்த நவீன தொழினுட்ப உத்திகளைக் கையாண்டு மாற்றுவலுவுடையோரின் நோய், உடல்நிலை, சரியான அளவு என்பவற்றுக்கு ஏற்றவாறு தயாரித்து வழங்கி வருகின்றது. அதுமட்டுமன்றி எமது சரியான அளவு என்பவற்றுக்கு ஏற்றவாறு தயாரித்து வழங்கி வருகின்றது. அதுமட்டுமன்றி எமது இயன் மருத்துவப் பகுதியில் (Physiotherapy Section) பாரிசவாதம், மூளை முடக்குவாதம், பிறப்புவாசித் தாக்கங்கள், அவயவ இழப்பு போன்றவற்றால் பாதிப்புற்றோர் குணம் பெறத் தேவையான அத்தியாவசிய இயன் மருத்துவ சிகிச்சைகளும் (Physiotherapy Treatment) வழங்கப்பட்டு வருகின்றன. விசேடமாக யாழ்.போதனா வைத்தியசாலையின் என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் கே.உமாபதி தனது வேலைப் பளுவின் மத்தியிலும் மாதந்தோறும் பல்வேறு தரப்பட்ட மாற்றுவலுவுடையோரைப் பார்வையிட்டு மேலதிக வைத்திய ஆலோசனைகளை இலவசமாக வழங்கி எமது பணி சிறப்புற உதவுவது அரிய வரப்பிரசாதமாகும்.

எமது இயன் மருத்துவ உதவியாளர்களால் (Physiotherapy Assistant) வாராந்தம் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அவயவம் இழந்தோருக்கான இயன் மருத்துவ நடவடிக்கைகளும் அவயவம் பொருத்துவதற்கு முன்னரான ஆலோசனைகளும் காலதாமதமின்றி உரிய நேரத்தில் அவயவங்களைச் சிறப்பாகப் பொருத்துவதற்குப் பெருந்துணையாய் இருக்கின்றது. மாற்றுவலுவுடையோரின் ஆற்றல்கள், திறமைகளை வெளிக்கொணரும் பொருட்டு கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுடன் துவிச்சக்கர வண்டி, முச்சக்கரவண்டி, ஓட்டப்போட்டிகள் போன்றவையும் நடத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர மாற்றுவலுவுடைய பயனாளிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த சுழற்சிமுறைக் கடனுதவிகளும் கல்வி நிலையை மேம்படுத்த கல்வி ஊக்குவிப்பு மானியமும் எமது நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. வெளிக்களப் புனர்வாழ்வின் மூலம் மாற்றுவலுவுடையோரை இனங்காணல் மற்றும் பயனாளிகளுக்கான தொடர்நிலைப் பரிசோதனை போன்றவையும் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### காலத்தின் தேவை

முன்னரைவிட அண்மைக்காலமாகப் பிறப்புவாசித் தாக்கங்கள், மூளை முடக்குவாதம் (Cerebralpalcy), நீரிழிவு போன்றவற்றால் வலுவிழப்பு ஏற்படுவது அதிகரித்துக் காணப்படுகின்றது. இவற்றுக்கும் மேலாக வன்னிப் பகுதியில் நிகழ்ந்த அண்மைய யுத்த அனர்த்தங்களினால் அளவிடமுடியாத அளவில் மக்கள் உடல் ஊனமுற்றவர்களாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு வன்னிப் பகுதியிலிருந்து பெரும் பாதிப்பு

**தொண்டன்**

களுடன் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் வசிக்கும் மாற்று வலுவுடையோரில் 24 பேருக்குச் செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டதோடு தேவைப்பட்டோருக்கு 03 சக்கர நாற்காலிகளும், 02 முச்சக்கர வண்டிகளும், 28 ஊன்றுகோல்களும் வழங்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட பணிகள் யாவும் அனுபவம் மிக்க உள்நாட்டிலும் (கொழும்பு) வெளிநாட்டிலும் (வியட்னாம், [illegible], தன்சானியா, பெங்களூர்) பயிற்சி பெற்ற ஊழியர்களால் அர்ப்பணிப்புடன் திற[illegible] வருகின்றது.

இவ்வாறு நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லும் வலுவிழப்புக்களுக்கு எதிராக எதிர்நீச்சல் போட்டு மறுவாழ்வு வழங்க எமது புனர்வாழ்வுப் பணிகள் முடிவின்றித் தொடர வேண்டியுள்ளன. எம் இனிய மக்களுக்கு நாம் மனமுவந்து ஆற்றும் இப்பணி உரியநேரத்தில் உரிய இலக்கை அடையவேண்டும் என்பதே எமது வேணவா. இப்புனிதப் பணியில் நன்கொடையாளர், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் எம்மோடு கரமிணைத்துச் செயற்படுமாயின் மாற்றுவலுவுடையோர் முழுமையான புனர்வாழ்வைப் பெறுவதுடன் அவர்களின் வாழ்வு இனிமையும் வளமும் பெறும் என்பது உறுதி.

### எமது நன்றிகள்

ஆரம்பகாலம் முதல் இன்றுவரை எமது நிதிநிலை அறிந்து கைகொடுத்து உதவிய அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், நலன் விரும்பிகள், உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர், விசேடமாக தற்போது நிதியுதவி, இடைத்தங்கல் முகாம்களிலிருந்து மாற்று வலுவுடையோரை அழைத்துவரல், மூலப்பொருள்களைத் தடையின்றிப் பெற உதவுதல் போன்றவற்றில் உதவிக்கரம் நீட்டியுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு எமது நிறுவனம் என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

## பயனாளிகளின் உள்ளத்திலிருந்து

ஜெய்ப்பூரை எனது பார்வையில் ஒரு புனர்வாழ்வுப் பணியகம் என்று கூறுவதைவிட அன்புப் பணியகம் என்று கூறுவதே பொருத்தமாகும். இறைவன் படைப்பான எமது அவயங்களை இழந்தோ அல்லது பாதிப்படைந்தோ போனாலும் மீள அதனைப் பொருத்த அல்லது செயற்பாட்டை மீளக் கொண்டுவருவது படைப்புத் தொழிலுக்கு நிகரானது. இங்கு வழங்கப்படுகின்ற அருட்பணிகள் மகத்துவமானது. இந்நிறுவனத்தில் மாற்றுவலுவுடையோருக்கு வேலைவாய்ப்பு அளித்தமை பாராட்டத்தக்கது. இந்நிறுவனத்திற்கும் ஊழியர்களுக்கும் இறைவன் நிறைவான ஆசீர் அருள்வாராக.

*அருட்சகோதரி: ப.புவேரினா (இயன்மருத்துவ சிகிச்சை பெற்றுவருபவர்).*

நீரிழிவு நோயினால் எனது வலதுகாலை முழங்காலுக்கு கீழ் இழந்து மனக்கலக்கத்துடன் இக்கட்டான சூழ்நிலையுடன் ஜெய்ப்பூருக்கு வந்த என்னை ஆற்றுப்படுத்தித் தரமான முறையில் காயம் ஏற்படாவண்ணம் செயற்கைக்கால் பொருத்திச் சிறந்த பயிற்சியுமளித்தனர். பல்வேறு கட்டமைப்புக்களை உள்ளடக்கிய இந்நிறுவனம் நிர்வாகத்திறமை, தொழில்நுட்பவல்லமை, ஒழுக்கம் நிறைந்த பணியாளர்களால் மேல் ஓங்கி நிற்கின்றது. இவர்கள் பண்பாடு என் மனதை ஈர்த்துவிட்டது. இச்சேவை மென்மேலும் வளர எல்லாம் வல்ல குலதெய்வமாகிய மூத்தவிநாயகரை வேண்டிநிற்கின்றேன்.

*திரு.ச.சட்டநாதக்குருக்கள்.*

2008இல் எனது இடதுகாலை முழங்காலிற்கு மேல் இழந்து வன்னி நிலைவரத்தால் அங்கு செயற்கை அவயவம் பொருத்தமுடியாது ஊன்றுகோல்களுடன் அகதிமுகாமில் பல துன்பங்களுக்கு மத்தியில் செயற்பட்டு வந்தேன். ஜெய்ப்பூரின் அருமுயற்சியால் 03.06.2009 அன்று செயற்கை அவயவம் பொருத்தப்பட்டு இலகுவாகவும் விரைவாகவும் நடப்பதற்கு ஏற்ப எனது சுயகாலிற்கு நிகராகச் செயற்கைக் காலினைச் செப்பனிட்டுத் தந்தனர். எனது பழைய நிலையை அடைந்த மகிழ்வு கிடைத்துள்ளது. எமக்கு உதவும் இந்நிறுவனத்திற்காகவும் பணியாளர்களுக்காகவும் இறைவனை வேண்டுகின்றேன்.

*திரு.சா.வசந்தராசா.*

ஏற்கனவே ஜெய்ப்பூரின் பயனாளியான நான் வன்னி சென்று அங்கு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் சிக்குண்டு ஏழு தடவைகள் இடம்பெயர்ந்து செயற்கை அவயவம் பழுதடைந்து, ஊன்றுகோலும் இழந்து சிரமப்பட்டு நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தவேளை மீண்டும் இந்நிறுவனத்தினர் எம்மைத் தேடி வந்து விசாரித்தது. நீங்கள் அநாதைகள் அல்ல. நாங்கள் உங்களைக் கைவிடமாட்டோம் என்பது போல் இருந்தது. என்னிடம் நம்பிக்கை ஏற்பட்டது. தரமான அவயவமும் சிறந்த பயிற்சியும் வழங்கி மற்றவர்கள் போல் மனிதனாக நடமாட வைத்த இந்நிறுவனத்திற்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். என்போன்ற எல்லோருக்கும் எல்லாக் காலமும் உதவிசெய்ய இந்நிறுவனமானது நீண்ட ஆயுளைக் கொண்டிருக்க இறைவனை வேண்டுகின்றேன்.

*திரு.இ.அ.ஆனந்தராசா.*

நான் சிறுவயதில் எனது அவயத்தை இழந்தபோதும், எனது வளர்ச்சிக்கேற்ப பல தடவை செயற்கைக் கால்களைச் செய்து மாற்றியதோடு மட்டுமல்லாது, வீணே வீட்டில் முடங்காது என்னைக் கல்வி கற்க ஊக்கப்படுத்தி அதற்காகக் கல்வி ஊக்குவிப்புத் தொகை மாதாந்தம் வழங்கி எனக்குப் புனர்வாழ்வு வழங்கியிருக்கும் ஜெய்ப்பூருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

*செல்வன் ம.தி.காரில்.*

எமது சேவைகளும் புள்ளி விவரங்களும் 1987.07.01 தொடக்கம் 2009.05.31 வரை

| | | |
|---|---|---|
| 01 | அவயவப்பகுதி | |
| | பொருத்தப்பட்ட அவயவங்கள் (இரு தொழில்நுட்பத்திலும்): கால்கள் | 4275 |
| | கரங்கள் | 206 |
| | தயாரித்த பாதங்கள் | 2823 |
| | தயாரித்த பட்டிகள் | 7952 |
| | அவயவ திருத்த வேலைகள் (இரு தொழில்நுட்பத்திலும்) | 11524 |
| 02 | *குறைபாட்டு நிவர்த்தி உறுப்புப் பகுதி* | |
| | பொருத்தப்பட்ட குறைபாட்டு நிவர்த்தி உறுப்புகள் | 418 |
| | முள்ளந்தண்டு ஆதாரம் மற்றும் அதனுடன் இணைந்தவை | 304 |
| | வடிவமைத்த காலணிகள் | 449 |
| | ஏனைய ஆதார உறுப்புகள் | 25 |
| 03 | *மாற்று வலுவுடையோர் நடமாடும் உபகரணம் தயாரிப்புப் பகுதி* | |
| | வழங்கப்பட்ட முச்சக்கர வண்டிகள் (சாதாரண, விசேட) | 511 |
| | வழங்கப்பட்ட சக்கர நாற்காலிகள் (சாதாரண, விசேட) | 251 |
| | வழங்கப்பட்ட தோள்மூட்டு ஊன்றுகோல்கள் | 684 |
| | வழங்கப்பட்ட முழங்கை ஊன்றுகோல்கள் | 2108 |
| | வழங்கப்பட்ட நடைதாங்கிகள் | 160 |
| | வழங்கப்பட்ட ஏனைய நடைஉதவு கருவிகள் | 190 |
| 04 | விசேட வைத்திய ஆலோசனை வழங்கப்பட்டோர் | 250 |
| 05 | வழங்கப்பட்ட இயன்மருத்துவ சேவைகள்: வைத்தியசாலையில் | 3242 |
| | நிறுவனத்தில் | 15494 |
| 07 | வழங்கப்பட்ட கல்வி ஊக்குவிப்புகளின் எண்ணிக்கை | 347 |
| 08 | [illegible] சுழற்சிக் கடனுதவியின் எண்ணிக்கை | 62 |
| 09 | [illegible]த் தரிசிப்பால் பயனடைந்தோர். | 1420 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடாமுயற்சியும் அதிபர், ஆசிரியர்களின் ஊக்குவிப்பாலும் இலக்கியத் திறனாய்வுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றேன்

## தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற ஜீவனா

**அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு 5 இல் இலக்கியத் திறனாய்வுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்த கரவெட்டி விக்னேஸ்வரிக் கல்லூரி மாணவியாக புஸ்பராஜ் ஜீவனா தன்னுடைய அனுபவங்களை உதயன் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறார்.**

**கேள்வி:-** அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெறுவீர்கள் என ஏற்கனவே எதிர்பார்த்தீர்களா?

**பதில்:-** ஆம். இயற்கையாகவே தமிழ் மொழி மீதும், இலக்கியங்கள் மீதும் எனக்கு ஆர்வம் அதிகம். ஆயினும் எனக்குள் இருந்த திறமையை சரிவர அறிந்து என்னை சீரான பாதையில் வழிநடத்திய பெருமை எமது பாடசாலை அதிபரையும் தமிழ் இலக்கிய ஆசிரியையுமே சாரும். இவர்களின் வழிகாட்டலால் இலக்கியத்திறனாய்வில் நிச்சயம் அகில இலங்கை ரீதியில் வெற்றி பெறுவேன் என எதிர்பார்த்திருந்தேன். என்னுடைய விடாமுயற்சியும், அதிபர், ஆசிரியர்களின் ஊக்கமும் அந்த எதிர்பார்ப்பை நனவாக்கி விட்டன.

**கேள்வி:-** இலக்கியத்திறனாய்வுப் போட்டிக்காக நீங்கள் மேற்கொண்ட பிரத்தியேகத் தயார்ப்படுத்தல்கள் பற்றி கூறமுடியுமா?

**பதில்:-** எப்போதுமே போட்டிகளுக்குச் செல்லும்போது சரியான தயார்ப்படுத்தல்களுடனேயே நான் செல்வேன். பயிற்சிகள்தான் வெற்றியை நோக்கி நகர வைக்கின்றன என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு உண்டு. இலக்கியத்திறனாய்வுப் போட்டிக்கான பயிற்சிக்கு நூல்களையே அதிகம் பயன்படுத்தினேன். இதற்கு பாடசாலை நூலகம் எனக்குக் கை கொடுத்தது. நூலகத்துச் செல்லும் நற்பண்பை எனக்குள் விதைத்தவர் ஆசிரியையான திருமதி நாளினி கணபதிப்பிள்ளை தான். அவரின் ஊக்கத்தால்தான் நான் எனக்குத் தேவையான நூல்களை தெரிந்தெடுத்து இலக்கியத்திறனாய்வில் தெளிவினைப் பெற்றுக்கொண்டேன். நூல்களைக் கற்றதும், இலக்கியம் சார்பான சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்பதுமே என்னுடைய பிரத்தியேகப் பயிற்சிகள் என்று கூறலாம்.

**கேள்வி:-** கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் ஆகியவற்றில் முதலிடத்தைப் பிடித்து தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்கும்போது உங்களுடைய உணர்வுநிலை எப்படி இருந்தது.

**பதில்:-** தேசிய மட்டப் போட்டியில் பங்குபெறுவது என்பது ஒரு கிடைத்தற்கரிய சந்தர்ப்பம். அச்சந்தர்ப்பம் எனக்கும் கிட்டியபோது பேருவகை கொண்டேன். அத்தோடு கிடைத்த சந்தர்ப்பத்தை மிகச்

நேர்காணல்:- வல்லழகனார்

சரியானபடி பயன்படுத்தி முதலிடத்தைப் பெறவேண்டும் என்ற எண்ணமும் எனக்குள் ஏற்பட்டது. ஆயினும் போட்டியின் போது எனக்கு எவ்வித பதற்றமும் ஏற்படவில்லை. ஏனெனில் எனது ஆசிரியர்களின் பயிற்சியும் என்னுடைய தன்னம்பிக்கையும் எப்படியும் நான் முதலாம் இடத்தைப் பெற்றுவிடுவேன் என்ற உள்ளுணர்வை எனக்குள் உண்டுபண்ணியிருந்தது. அத்தோடு ஏனைய மாகாணங்களில் இருந்து தேசியமட்டப் போட்டியில் கலந்து கொள்ள வந்த மாணவர்களோடு உரையாடிய போது என்னுடைய தன்னம்பிக்கை இன்னும் அதிகரித்தது. எனவே எதுவித பதற்றமோ, பயமோ இல்லாது திடமான மனதோடு போட்டியை எதிர்கொண்டேன். அதற்குப் பரிசாக எனக்கு முதலிடம் கிடைத்தது. அத்தோடு எனது பாடசாலையைச் சேர்ந்த வேறு சில மாணவிகளும் தேசிய மட்டப் போட்டியில் பங்கேற்க வந்திருந்தார்கள். அவர்களின் ஊக்கமும் என் வெற்றிக்குக் காரணியாக அமைந்தது.



**கேள்வி:-** தங்களைப் போல சாதிக்கத் துடிக்கும் மாணவர்கள் எவற்றைக் கைக் கொண்டால் வெற்றி கிட்டும் என நம்புகிறீர்கள்?

**பதில்:-** எமக்குள் ஒளிந்திருக்கும் திறமைகளை எம்மை விடவும் எமது ஆசிரியர்களே நன்கு அறிவார்கள். எனவே எம்மை ஆசிரியர்கள் வழிப்படுத்தும்போது அவர்களுக்கு நாம் முழு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் எமது முழுத் திறமையும் வெளிக் கொணர வாய்ப்புக் கிடைக்கும். அத்தோடு நூல் நிலையங்களை மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அதனூடாக பல் தன்மை சார் அறிவு மாணவர்களுக்கு ஊட்டப்படும். இது மாணவர்களுக்கு இயல்பாகவே தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் ஏற்படுத்தும். மேலும் மாணவப் பருவத்திலே எமது முழுத்திறமையையும் வெளிப்படுத்தினால் எதிர்காலத்திலும் நாம் சிறப்பாக நமது திறமைகளை வெளிப்படுத்த உதவும். ★

# பன்றிக் காய்ச்சல் நோய்: 14ஆவது நபரும் இனங்காணப்பட்டார்

கொழும்பு, ஜூலை, 1

பன்றிக்காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட 14 ஆவது நோயாளியாக பெண்மணி ஒருவர் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

ஆஸ்திரேலிய வாசியான இப்பெண் சில நாள்களுக்கு முன்பு தனது கணவருடன் இலங்கையில் நடைபெற்ற ஒரு திருமண வைபவத்தில் கலந்துகொள்வதற்காக வந்துள்ளார். இவரது கணவருக்கு ஏற்கனவே பன்றிக் காய்ச்சல்நோய் கண்டு பிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

பன்றிக்காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட 14 ஆவது நபர் இந்தப் பெண்மணி என்று தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சுதத் பீரிஸ் தெரிவித்தார்.

(க-10)


### ஒத்து மாறல்

மத்திய மாகாணப் பாடசாலை ஆங்கில ஆசிரியர் வட மாகாணத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார். ஆங்கில மொழி மூல ஆசிரியர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொ.பே.இல: 071 2830394, 0718315499


# நவநீதம்பிள்ளையின் அறிக்கைகள் குறித்து இலங்கை அரசு கடும் அதிருப்தி

கொழும்பு, ஜூலை1

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசு கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

மனித உரிமை விவகாரங்களை சரியான முறையில் நெறிப்படுத்த நவநீதம்பிள்ளை ஒத்துழைப்பு வழங்கத் தவறியுள்ளார் என மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பில் எப்போதும் கடுமையான விமர்சனங்களை மட்டுமே நவநீதம்பிள்ளை வெளியிட்டு வருகிறார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நவநீதம்பிள்ளையின் நடவடிக்கைகள் காரணமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் நெருங்கிச் செயற்படக் கூடிய வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் மனித உரிமை க்ண்காணிப்பகமொன்றை அமைப்பதற்கு இடமளிக்கப் படமாட்டாது எனவும், அதனால் மனித உரிமை பேரவையின் நடவடிக்கை களுக்கு பாதிப்பு ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவ நீதம் பிள்ளை அண்மைக் காலமாக வெளியிட்டு வரும் கருத்துகள் இலங்கைஅரசுக் குக் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கை அரசினால் மனித உரிமை மீறல் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்று தற்போதைய மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மற்றும் முன்னர் பதவி வகித்த லூயிஸ் ஆர்பர் ஆகிய இருவருமே குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஆனிமாதம் 18 ஆம் நாள் நாளை (02.07.2009) வியாழக்கிழமை மு.பகல் 11.07 மணி முதல் 12 மணி வரையுள்ள சுவாதி நட்சத்திரமும் கன்னி லக்கினமும் அமிர்தசித்தயோகமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன் **ஜெயமோகன்** அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி **அன்பரசி** அவர்களுக்கும்

ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்மன் துணை கொண்டு
"ஆனைக்கோட்டை துரைஐயா திருமண மண்டபத்தில்"
திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திருமதி தங்கவேல் சறோஜினி
நவாலி றோட்,
ஆனைக்கோட்டை.

திரு.திருமதி சி.இலங்கநாதன்
நிர.முகவரி:-7 ஆம் வட்டாரம் புங்குடுதீவு.
தற்.முகவரி:- 58/1, சிவன் பண்ணைவீதி,
யாழ்ப்பாணம்.

(85985) இரு வீட்டார் அழைப்பு


# ப.நோ.கூ.சங்கங்களின் பிரச்சினைகள் குறித்து அவற்றின் நிர்வாகிகளுடன் டக்ளஸ் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 1

குடாநாட்டில் இயங்கும் அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அச்சங்கங்களின் நிர்வாகிகளுடன் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து ரையாடினார்.

அமைச்சரின் யாழ்.பணிமனையில் கடந்த திங்கட்கிழமை காலை இடம்பெற்ற இச்சந்திப்பின் போது தற்போதைய சூழ்நிலையில் யாழ்.செயலகத்திற்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்தி பொருத்தமான இணக்கப்பாடுகளை எட்டுவது, சமுர்த்தி மற்றும் நிவாரணங்களை வழங்கும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தவிர்க்க யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் சேவைக் கட்டணங்களை பொருத்தமாக மாற்றுவது போன்ற பல முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதே நேரம் ஏ-9 தரைப்பாதை திறக்கப்படவுள்ள நிலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்திறனை அதிகரிப்பது, சங்கங்களின் நிதி நெருக்கடிகள் மற்றும் வங்கிக் கடன், பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் உடனடியாக எதிர்நோக்கும் சிரமங்களைத் தவிர்த்தல் போன்ற விடயங்கள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டதுடன் பொருள்களுக்கான பாதுகாப்புச் சோதனை நடவடிக்கைகள் என்பன குறித்தும் அவதானஞ் செலுத்தப்படுவதுடன் பாதுகாப்புத் தரப்பினருடனும் இவ்விடயம் குறித்து கலந்துரை யாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின் இறுதியில் உரையாற்றிய அமைச்



சர் டக்ளஸ் தேவானந்தா:- மக்களுக்கு பெரிதும் நன்மை பயக்கக் கூடிய கூட்டுறவுச் செயற்பாடுகள் வலுப்பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன் திறமையான நிர்வாகம் மற்றும் கட்டுக்கோப்பான செயற்பாடுகளை ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கங்களும் உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். அத்துடன் சகல தேவைகளுக்கும் யாழ்.செயலகத்தில் தங்கியிராமல் 24 ப.நோ.கூ.சங்கங்களும் தமக்குள் பொருத்தமான இணக்கப்பாடுகளையும் தொடர்புகளையும் ஏற்படுத்துவதன் மூலம் குடாநாட்டு கூட்டுறவு செயற்பாடுகளை [illegible] வேண்டுமென [illegible] தேவானந்தா வேண்டுகோள் விடுத்தமை குறிப்பிடத்தக்கது. (1)


**SALE** DOCTER USED MOTOR BIKE, T.V.S. VICTOR GLX 125 Vti-BLACK, NPJY XXXX.
NO BROKERS (ALL THE Document, AVAILABLE)
Contact:- 0778998356



# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 ★ 11 ★ 1934

மறைவு 01 ★ 07 ★ 2006



## மு.கிருஷ்ணபிள்ளை (ஆரோன்)

(ஓய்வுபெற்ற அதிபர், ஊரி அ.மி.த.க. வித்தி.)

ஆல விருட்சமாய் இருந்து – உம்
உறவுகளை தாங்கி நின்றீர் ஐயா – அது
வேருடன் சாய்ந்ததினால் – இன்று
தடுமாறுகின்றோம் உலகில் நாம்
காலமகள் ஏட்டினிலே
காவியமாய் ஆகிவிட்டாய் ஐயா
மக்கள் எம் மனதிலே – என்றும்
அழியா ஓவியமாய் ஆகிவிட்டாய்
"ஆலம் விழுதினைப் போல் உறவு
ஆயிரம் வந்தும் என்ன
வேரென நீயிருந்தால் அதில் நாம்
வீழ்ந்து விடாதிருப்போம்"

பாலாவோடை,
காரைநகர்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(85623)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவரிடம் முதல்வர் மன்னிப்புக் கோரவேண்டும்: பாம்பனில் நாளை அ.தி.மு.கவினர் ஆர்ப்பாட்டம்!

சென்னை, ஜூலை 01

மீனவ மக்களைப் பேராசை பிடித்தவர்கள் என்று கூறிய முதல்வர் கருணாநிதியை, மீனவர்களிடம் மன்னிப்பு கேட்க வலியுறுத்தி இராமநாதபுரம் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் நாளை (2ஆம் திகதி) கண்டன் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அக்கட்சியின் பொதுச்செயலர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழக மீனவர்களின் கண் போன்று விளங்கிய கச்சதீவை மத்திய அரசு விட்டுக்கொடுத்ததன் காரணமாக மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்படையினருடன் பிரச்சினை ஏற்படாத நாளே இல்லை என்னும் அளவுக்கு மீனவர்களின் நிலைமை மோசமாகியுள்ளது. இதற்கு முழுக் காரணம் முதல்வர் கருணாநிதிதான்.

கருணாநிதி சமீபத்தில் சட்டப்பேரவையில் பேசும்போது, நல்லவகை மீன் கிடைக்கும் என்று எண்ணுகின்ற பேராசை கொண்ட சில மீனவர்களால், அவர்கள் தங்கள் உயிரை இழக்க நேரிடுகிறது எனக் கூறியிருக்கிறார்.

மீனவ மக்களைப் பேராசை பிடித்தவர்கள் என்று கூறிய கருணாநிதி அதற்காக மன்னிப்பு கேட்க வேண்டும் என நான் அறிக்கை மூலம் வலியுறுத்தியிருந்தேன். எனினும் கருணாநிதி அதுகுறித்து இதுவரை வாய்திறக்கவில்லை. எனவே, மீனவ மக்களை தரக்குறைவாகப் பேசிய முதல்வர் கருணாநிதியைக் கண்டித்தும், மீனவ மக்களிடம் மன்னிப்புக் கேட்க வலியுறுத்தியும் ஜூலை 2ஆம் திகதி (நாளை) வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் பாம்பனில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.



இந்த ஆர்ப்பாட்டம் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றச் செயலர் ஜெயக்குமார் எம்.எல்.ஏ. தலைமையில், இராமநாதபுரம் மாவட்டச் செயலர் சத்தியமூர்த்தி முன்னிலையில் நடைபெறும் - என்றுள்ளது.

# ஈழ அகதிகள் எட்டு பேர் இராமேஸ்வரம் வருகை

இராமேஸ்வரம், ஜூலை 01

இலங்கை, தலைமன்னாரில் இருந்து பிளாஸ்டிக் படகொன்றில் 2 குடும்பத்தைச் சேர்ந்த 3 ஆண்கள் 4 பெண்கள், ஒரு பெண்குழந்தை என 8 பேர் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு நேற்றுமுன்தினம் வந்தனர்.

பின்னர் அவர்கள் தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்தனர். அங்கு அவர்களிடம் கியூப் பிரிவு பொலிஸார், மத்திய புலனாய்வுப் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர்.

விசாரணைக்கு பின்னர் 8 பேரும் மண்டபம் அகதிகள் முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உயர்நீதிமன்றில் தமிழை வழக்கு மொழியாக்குக!

## வீரப்ப மொய்லியிடம் கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஜூலை 01

சென்னை உயர்நீதிமன்றில் தமிழை வழக்கு மொழி ஆக்குங்கள் - என்று மத்திய சட்டத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லியிடம் முதல்வர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சர் வீரப்ப மொய்லி, முதல்வர் கருணாநிதியை சென்னை கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் காலை சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின் போது, தமிழக சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் டி.சுதர்சனம் உடனிருந்தார்.

சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்த இந்தச் சந்திப்புக்கு பின் வெளியே வந்த மத்திய சட்டத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது, செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு வீரப்ப மொய்லி அளித்த பதில்களும் வருமாறு -

கே - முதல்வர் கருணாநிதியைச் சந்தித்ததற்கான நோக்கம் என்ன?

ப - நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியை தொடர்ந்து முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து வாழ்த்துக் கூற வேண்டும் என்று ஆவலுடன் இருந்தேன். அதற்கான நேரம் இப்போதுதான் கிடைத்தது. நான் எழுதிய 'ராமாயணம் மகா வேசனம்' என்ற புத்தகம் தமிழில் வெளிவர இருக்கிறது. அதற்கான விழா ஜூலை 19ஆம் திகதி சென்னையில் நடக்கிறது. அந்த விழாவில் கலந்துகொள்ள முதல்வர் கருணாநிதிக்கு அழைப்பு விடுக்கவந்தேன்.


முதல்வர் கருணாநிதி உயர் நீதிமன்றில் தமிழை வழக்கு மொழியாகக் கொண்டு வாருங்கள் என்று கோரிக்கை வைத்துள்ளார். நானும் நடவடிக்கை எடுக்கிறேன் என உறுதி அளித்துள்ளேன்.

கே - ஓரினச்சேர்க்கைக்கு சட்டப்பூர்வமாக அங்கீகாரம் வழங்கப்படுமா?.

ப - அங்கீகாரம் வழங்குவது குறித்து ஆலோசனை நடத்தி வருகிறோம்.

கே - நீதிபதிகள் குற்றம் செய்தால், அவர்களைத் தண்டிப்பதற்கான பிரேரணை வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படுமா?.

ப - அதுகுறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்து வருகிறேன் - என்றார்.



சட்டத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி, முதல்வர் கருணாநிதியை சென்னை கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்து மலர்க்கொத்து வழங்கிய போது...

# மேற்கு வங்கத்தில் மாவோயிஸ்ட்டுகள் மீது இந்தியப் படை இறுதிக் கட்டத் தாக்குதல்

காந்தபஹரி, ஜூலை 01

மேற்கு வங்க மாநிலம் மேற்கு மிதுனபுரி மாவட்டத்தில் மாவோயிஸ்ட்டுகளை நசுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படையினர் இறுதிக்கட்ட நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இதனிடையே, பாதுகாப்புப் படையினருக்கு எதிராக மாவோயிஸ்ட்டுகள் திங்கட்கிழமை கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர். துப்பாக்கித் தாக்குதலும் நடத்தினர்.

இந்தச் சம்பவம் மேற்கு மிதுனபுரி மாவட்டம் பரகட்டா மற்றும் லால்கர் இடையேயுள்ள ஒரு இடத்தில் நடந்தது.

பாதுகாப்புப் படையினர் முன்னேறுவதைத் தடுக்கும் நோக்கில் வனப்பகுதி ஒன்றில் முதலில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்திய மாவோயிஸ்ட்டுகள் பின்னர் துப்பாக்கியால் சுட்டனர்.

பாதுகாப்புப் படையினர் பதிலடி கொடுக்கவே மாவோயிஸ்ட்டுகள் அனைவரும் ஓட்டம் பிடித்தனர் என்று மத்திய பொலிஸ் படையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாவோயிஸ்ட்டுகளின் பக்கபலத்தில் போராட்டம் மேற்கொண்டு வரும் பழங்குடிகள் வாழ் பகுதியான காந்தபஹரியை படையினர் திங்கட்கிழமை மீட்டனர். 1600 படையினர் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் லால்கர் மற்றும் ராம்கர் ஆகிய இரு முனைகளின் வழியாகவும் காந்தபஹரியை சென்றடைந்தனர்.

இந்நிலையில் சிறப்பு அதிரடி நடவடிக்கைக்குத் தலைமை தாங்கும் டி.ஐ.ஜி. சித்திநாத் கூறியவை வருமாறு -

பாதுகாப்புப் படையினருக்கு எதிராக மாவோயிஸ்ட்டுகள் தரப்பலிருந்து எந்தத் தாக்குதலும் காணப்படவில்லை. தற்போதைக்கு இங்கேயே முகாமிட்டு மாவோயிஸ்ட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

காந்தபஹரிக்கு புறப்பட்டபோது மாவோயிஸ்ட்டுகள் பதுங்கியுள்ளனரா என்பதையும் ஹெலிகொப்டரில் பறந்தபடி சோதனை போட்டனர் - என்றார்.




# அரச பணத்தில் மாயாவதிக்குச் சிலையா? உ.பி. அரசுக்கு உச்ச நீதிமன்று நோட்டீஸ்!

புதுடில்லி, ஜூலை 01

உத்தரப் பரதேசத்தில் முதல்வர் மாயாவதியின் சிலைகளும் அவரது பகுஜன் மாஜ் கட்சியின் யானைச் சின்னங்களும் ஆங்காங்கே அரசுப் பணத்தில் அமைக்கப்படுவது தொடர்பாக மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்த நோட்டீஸுக்கு 4 வாரத்துக்குள் பதில் அளிக்குமாறும் அது உத்தரவிட்டுள்ளது.

அரசு செலவில் மாயாவதி மற்றும் யானையின் சிலைகள் நிறுவப்படுவதை நிறுத்த உத்தரவிடக்கோரி உச்ச நீதிமன்ற சட்டத்தரணி ரவி காந்த் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடர்ந்தார்.

இந்த மனுவை நீதிபதிகள் தல்வீர் பண்டாரி, ஏ.கே.கங்குலி ஆகியோர் அடங்கிய ஆயம் திங்கட்கிழமை விசாரித்தது. இந்த மனுவை ஏன் ஏற்கக்கூடாது என்பதற்கான காரணங்களை நோட்டீஸக்கான பதிலில் அரச தரப்பில் தெரிவிக்கலாம் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

அந்த மனுவில் ரவிகாந்த் தெரிவித்துள்ளவை வருமாறு -

கட்சிச் சின்னம் யானை மற்றும் மாயாவதி, கட்சியின் நிறுவுநர் கன்ஷிராம், தலித் தலைவர்களின் சிலைகளை அமைத்து பூங்காக்கள் நிறுவும் திட்டத்துக்காக 2008 - 2009 மற்றும் 2009 - 2010ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ரூபா 2 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டு செலவிடப்படுகிறது.

முதல்வரின் புகழ்பாடும் நோக்கில் அவருக்கு சிலைகள் நிறுவப்படுகின்றன. அரச செலவில் இத்தகைய சிலைகளையும் பூங்காக்களையும் நிறுவக்கூடாது என்று மாயாவதி அரசுக்கு உத்தரவிடவேண்டும். மக்களின் வரிப்பணம் சிலைகளை நிறுவுவதற்காக செலவிடப்பட்டுள்ளது குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடவேண்டும் - என்றுள்ளது.

இந்த வழக்கில் மாயாவதி, அவரது தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி, மாநில தலைமைச் செயலர், தேர்தல் ஆணையம் ஆகியோரை எதிர்த் தரப்பினராக ரவி காந்த் சேர்த்துள்ளார்.

பொது இடங்களில் நிறுவப்பட்டுள்ள மாயாவதி மற்றும் அவரது கட்சியின் சின்னமான யானையின் சிலைகளை அகற்ற உத்தரவிட வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரியுள்ளார் மனுதாரர்.

# வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா நாளை ஜப்பான் பயணமாகிறார்

புதுடில்லி, ஜூலை 01

மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா மூன்று நாள்கள் பயணமாக ஜப்பான் செல்கிறார். இரு நாடுகளிடையிலான வர்த்தகம், முதலீடு குறித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

சர்வதேச தேக்க நிலை காரணமாக ஏற்பட்டுள்ள சூழ்நிலை குறித்தும் ஜப்பானியத் தலைவர்களுடன் கிருஷ்ணா பேச்சு நடத்துவார்.

நாளை ஜப்பானுக்குப் பயணமாகும் கிருஷ்ணா, அங்கு ஜப்பான் வெளியுறவு அமைச்சர் ஹிரோபியுமி நகசோனேயைச் சந்திக்கிறார்.

இந்தச் சுற்றுப் பயணத்தின்போது ஜப்பான் பிரதமர் தாரோ அசோவையும் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிகிறது. டோக்கியோவில் கட்டப்பட்டுள்ள இந்தியத் தூதரகக் கட்டடத்தையும் கிருஷ்ணா திறந்து வைக்கவுள்ளார்.

# பட்ஜெட் கூட்டத்தொடரை முன்னிட்டு நாடாளுமன்ற சர்வ கட்சி கூட்டம் இன்று

புதுடில்லி, ஜூலை 01

நாடாளுமன்ற கூட்டத்தொடரைச் சுமுகமாக நடத்துவதற்காக நாடாளுமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடர் நாளை வியாழக்கிழமை (ஜூலை 2) தொடங்குகிறது. இந்தக் கூட்டத்தொடர் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்த சூழ்நிலையில், நாடாளுமன்ற கூட்டத்தொடரைச் சுமுகமாக நடத்துவதற்காக நாடாளுமன்ற அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தை சபாநாயகர் மீரா குமார் கூட்டியுள்ளார்.

வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்னர் இன்று இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

நாடாளுமன்ற சபாநாயகராக மீராகுமார் பதவியேற்ற பி[illegible] கூட்டுவது இது[illegible] பிடத்தக்கது.

# மு.க.அழகிரி, டி.ஆர். பாலு, குமாரின் வெற்றியை எதிர்த்து நீதிமன்றில் வழக்கு

சென்னை, ஜூலை 01

மக்களவைத் தேர்தலில் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி, மத்திய முன்னாள் அமைச்சர் டி.ஆர். பாலு, திருச்சி எம்.பி. குமார் (அ.தி.மு.க.) ஆகியோரின் வெற்றியை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மதுரை தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் மு.க. அழகிரி, மார்க்சிஸ்ட் வேட்பாளர் பி. மோகனை விட ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 975 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

இந்நிலையில், அழகிரி வெற்றியை எதிர்த்து மார்க்சிஸ்ட் கட்சி வேட்பாளர் மோகன் திங்கட்கிழமை தாக்கல் செய்த மனுவின் விவரம் வருமாறு -

மதுரைத் தொகுதியில் உள்ள 70 சதவீத வாக்காளர்களுக்கு தனது முகவர்கள் மூலம் தலா 500 ரூபா ரொக்கப் பணத்தை மு.க. அழகிரி வழங்கியுள்ளார். அழகிரி, வாக்காளர்களுக்கு பணம் விநியோகித்தமை தொடர்பாக பொலிஸார் வழக்[illegible]ளனர்.

இதன் மூலம், மு.க. அழகிரி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை தெரியவருகிறது.

எனவே, மதுரைத் தொகுதியில் மு.க. அழகிரி வெற்றி பெற்றமை செல்லாது என்று அறிவித்து, நான் வெற்றி பெற்றேன் என அறிவிக்க வேண்டும் - என்று அதிலுள்ளது.

இதேவேளை, ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் டி.ஆர். பாலு, பா.ம.க. வேட்பாளர் ஏகே. மூர்த்தியை விட 25 ஆயிரத்து 24 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டார்.

டி.ஆர். பாலுவின் வெற்றியை எதிர்த்து ஏகே.மூர்த்தி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், டி.ஆர். பாலு வெற்றி பெற்றமையை செல்லாது என்று அறிவித்து நான் வெற்றி பெற்றேன் என அறிவிக்க வேண்டும் - என்றுள்ளது.

இதேபோன்று, ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் போட்டியிட்ட நாகராஜனும், டி.ஆர்.பாலு வெற்றியை எதிர்த்து வழக்குத் தொடர்ந்துள்ளார்.

திருச்சி மக்களவைத் தொகுதியில் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் பி.குமாரின் வெற்றியை எதிர்த்து காங்கிரஸ் வேட்பாளர் சாருபாலா ஆர். தொண்டைமான் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















அண்ணா நிறுவனத்தின் பொன்விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவில் அறிவாலயத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

பொன்விழா மலரின் முதற்பிரதியை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் வெளியிட்டு வைக்க யாழ்.பல்கலைக்கழக நூலகர் செல்வி சி.அருளானந்தம் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் கலைநிகழ்வு நிகழ்த்திய மாணவர்களில் ஒரு பகுதியினரையும் மேல்வரிசைப் படங்களில் காணலாம்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் வண. அருட்தந்தை கலாநிதி எஸ்.ஜெபநேசன், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, யாழ்.மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் உரையாற்றுவதை ஏனைய படங்களில் காணலாம். *(படங்கள்: லிங்கன்)*


## கண்ணீர் அஞ்சலி



### உயர்திரு.வைத்திலிங்கம் கணேசலிங்கம்

யாழ்.சதுரங்கக் கழகத்தின் ஸ்தாபகரும் யாழ்.மாவட்டத்தில் சதுரங்க விளையாட்டைப் பிரபல்யப்படுத்தி அதன் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றியவருமான உயர்திரு.வைத்திலிங்கம் கணேசலிங்கம் அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தவர்களுக்கும் சதுரங்க ஆர்வலர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அங்கத்தவர்கள்,
யாழ்.சதுரங்க சம்மேளனம், யாழ்ப்பாணம்.
(85995)


## சிறுவர் போசாக்கு கருத்தரங்கு

விவசாயத் திணைக்களத்தினால் பாடசாலைகளில் சிறுவர் போஷாக்கு தொடர்பான கருத்தரங்கும் செய்முறை விளக்கமளித்தலும் இடம்பெற்று வருகின்றன.

கடந்தவாரம் சண்டிலிப்பாய் வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, பண் டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றில் இலைக்கஞ்சி தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றதோடு செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டு இலைக்கஞ்சி மாணவர்களுக்குப் பரிமாறப்பட்டது. இந்த நிகழ்வில் விவசாய போதனாசிரியர் திருமதி ப.மணிவண்ணன் கலந்துகொண்டு செய்முறை விளக்கமளித்தார். (50-38)

## நலன்புரிநிலைய மக்களின் உதவிக்கு நிதி சேகரிக்க நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 1

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தின் ஏற்பாட்டில் திருமதி மனோன் மணி குலசிங்கத்தின் 'ஸ்ரீதட்சணாமூர்த்தி வழிபாடு' நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு விநாயகர் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த வெளியீட்டின் மூலம் பெறப்படும் அன்பளிப்புகள் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் என்று ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தெரிவித்துள்ளது.

கோப்பாய் றோ.க பாடசாலை அதிபர் ச.லலீசன் சிறப்புரையையும் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் வள உரையையும் நிகழ்த்துவர்.

நூலை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வெளியிட்டுவைக்க அதன் முதற்பிரதியை ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ இ.ரமணீதரக் குருக்கள் பெற்றுக் கொள்வார். (203)

## இணுவில் மத்தி முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வலிகாமம் கல்வி வலய தமிழ்த்தினப் போட்டியில் திறந்த பிரிவு நாட்டிய நாடகத்துக்கான போட்டி கடந்த சனிக்கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் முதலாமிடத்தை இணுவில் மத்திய கல்லூரியும் இரண்டாமிடத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மூன்றா மிடத்தை பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையும் பெற்றுக் கொண்டன. (50-38)


## தவறிவிட்டது

59 - 9837 இலக்கத்தைக் கொண்ட டொல்பின் வானுக்குரிய உரிமைப் பத்திரங்கள் அனைத்தும் அடங்கிய பை யாழ்.நகர்ப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 077 4895744 உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (85994)

## விற்பனையாகிறது

மன அமைதிக்கும், உடல் ஆரோக்கியத்திற்கும் வழிசொல்லும் "நோய் தீர்க்கும் யோகாசனங்கள்" புத்தகம் தற்போது விற்பனையாகிறது. யாழ்.நகரின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (85991)

## விற்பனைக்கு

மூன்று SUNTEL தொலைபேசி இணைப்புக்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 4140158

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.மேற்கு பிரிவு நிர்வாகத்திடம் மானிப்பாய் பகுதியிலுள்ள வீதியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகைப் பணம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணத்தினைத் தொலைத்தவர்கள் உரியமுறையில் அத்தாட்சிப் படுத்தி பணத்தினை பிரிவுத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நி.உ. நபாசூரியன், கௌரவ தலைவர், இ.செ.சி.சங்கம்,
தெல்லிப்பழை வீதி,
(யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சமீபமாக)
வட்டுக்கோட்டை. (85992)

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

80% off

### மாபெரும் புலமைபரிசில்திட்டம் – 2009

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office — 3 Months — ~~[illegible]~~ 2500/= | Diploma in Desktop Publishing — 4 Months — ~~15000/=~~ 3000/= | Diploma in Web page Designing — 3 Months — ~~15750/=~~ 3150/= |
| Diploma in Graphic Publishing — 4 Months — ~~15750/=~~ 3150/= | Diploma in Hardware Engineering — 3 Months — ~~15000/=~~ 3000/= | Diploma in AutoCAD — 3 Months — ~~15000/=~~ 3000/= |
| Accounting Package (Quick Book) — 3 Months — ~~15750/=~~ 3150/= | Diploma in Computer Science — 4 Months — ~~15750/=~~ 3150/= | Honors Diploma in Computer Science — 4 Months — ~~18000/=~~ 3600/= |

50%Off

ADVANCE COURSES

Diploma in Video Editing 4250/=
Diploma in Multimedia 375ȷ/=

computer express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும், சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள், வரையறையற்ற செய்முறைப்பயிற்சி

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch
I : 02/07/2009 9 AM
II : 03/07/2009 9 AM
III: 04/07/2009 10 AM/2PM
IV : 05/07/2009 10 AM/2PM
IV : 07/07/2009 9 AM

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சருமான மாண்புமிகு

### டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும் யாழ்.மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மக்கள் தொடர்பு அதிகாரி **சி.அ.உதயன்** அவர்களுக்கும் காரைநகர் துறைமுக உபதபாலதிபர் நியமனத்தினை பெற்றுத் தந்தமையினை இட்டு உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி தவநாதன் ரஞ்சினி
உபதபாலதிபர்,
காரைநகர் துறைமுகம்,
காரைநகர்.
(86993)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கானல் நீராகும் 13 ஆவது திருத்தம்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை அரசு வெற்றியீட்டியதான அறிவிப்பு வெளியான கையோடே தென்னிலங்கையில் பேரினவாத சக்திகள் கிளர்ந்தெழுந்து ஆடும் என்பது எதிர்பார்க்கப்பட்டது ஒன்றே.

அதை இப்போது நடைமுறையில் காணும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

இதுவரை, அரசுடன் இணைந்து நின்ற இந்தச் சக்திகள், இப்போது அரசுக்கு எசச்ரிக்கை விடுத்து, சவால் உரைக்கும் அளவுக்கு எகிறுகின்ற கள நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

தமிழர் பிரதேசங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் எத்தனத்தில் அரசு இறங்குமானால் அரசிலிருந்து வெளியேறி, அதற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடுவோம் என அரசுப் பங்காளிக்கட்சியான ஹெல உறுமய அரசுக்குப் பகிரங்க எச்சரிக்கை விடுக்கும் சாயலில் அறிவிப்புச் செய்துள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதைக் கடுமையாக எதிர்ப்பதாகக் குறிப்பிட்டுள்ள அக்கட்சி, தமிழருக்கு இருப்பிடம், உணவு, உடை, சுய கௌரவம் தவிர வேறு எதுவும் தேவையில்லை என்றும் தானே வரையறை செய்து அறிவித்திருக்கின்றமை வேடிக்கையானது.

நலன்புரி மையங்கள் அல்லது அகதி முகாம்கள் என்ற பெயரில் குறித்தொதுக்கப்படும் இடங்களில் வாழ்ந்துகொண்டு, அங்கு அரசும், ஏனைய உதவி நிறுவனங்களும் போடும் உணவு மற்றும் உடை போன்ற உதவிப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு வாழ்வதுதான் தமிழ் மக்களின் கௌரவமான வாழ்வு என இத்தரப்பினர் எண்ணிக்கொண்டார்களோ என்னவோ தெரியவில்லை.

தமிழர்களைப் பொறுத்தவரை தமது தாயக மண்ணில், தமது நலன்களைத் தாமே பேணும் வகையில், தங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொண்டு, இந்தத் தேசத்தில் மற்றெல்லாப் பிரஜைகளுக்கும் உரிய உரிமைகளையும் வசதிகளையும் தாமும் சமமாகப் பகிர்ந்து அனுபவித்துக்கொண்டு, எந்தவித இன ஒதுக்கல் மற்றும் அடக்குமுறை, ஒடுக்குமுறை ஆகியவற்றுக்கு உட்படாமல் சுய திருப்தியுடன் வாழ்வதையே தமது கௌரவமான வாழ்க்கை முறையாகக் கருதுகின்றார்கள்.

அத்தகைய கௌரவ வாழ்க்கை முறையை சிறுபான்மையினரான தமிழர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான முதல் அடியே அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் என்று பல தரப்பினராலும் கூறப்பட்டு வந்தது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வான இடைக்கால ஏற்பாடாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள் என்ற யோசனையை அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியிடம் கையளித்தபோது, 'இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முதல் அடி' என்று குறிப்பிட்டே அதனை வரவேற்றது இந்தியா. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான நீண்ட தூர பயணத்தில் இது ஒரு முதல் காலடி என்றுதான் இந்தியா அச்சமயம் இதனை விமர்சித்தது.

அது மாத்திரமல்ல, அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தீர்வு காணப்படும் என்ற நிலைப்பாட்டையே அரசுத் தரப்பு உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் அவ்வப்போது பரப்புரைகள் மூலம் வெளிப்படுத்தி வந்தது.

ஆனால் இப்போது முதலுக்கே மோசம் வந்துவிடும் என்ற நிலைமை. பதின்மூன்றாவது திருத்தத்தையே நிராகரித்து போர்க்கொடி தூக்கியிருக்கின்றது அரசுக்குள் வலுவான சக்தியாகச் செயற்பட்டு வரும் ஜாதிக ஹெல உறுமய.

அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் அரசமைப்புக்குச் செய்யப்பட்ட பதின்மூன்றாவது திருத்தமே போதுமானதல்ல - தமக்குத் திருப்தி தரக்கூடியதல்ல - தமது நீதி, நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடியதல்ல - என்று தெரிவித்து நிற்கின்றார்கள் தமிழர்கள். தற்போதைய ஒற்றையாட்சிக் கட்டமைப்பு அரசுக்குள் பதின்மூன்றாவது திருத்தம் மூலம் வழங்கப்படும் அதிகாரப் பரவலாக்கல் தங்களது எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யத் தக்கதல்ல என்பதைத் தமிழர்கள் தரப்பு தொடர்ந்து பிரதிபலித்தே வந்துள்ளது.

எனினும் நம்பகத்தன்மையையும், நல்லெண்ண சுமுக நிலையையும் கட்டி வளர்ப்பதற்கான முதல் முயற்சியாக - ஆரம்பக்கட்ட எத்தனமாக - அதனை ஏற்றுச் செயற்படுங்கள் என்பதே தென்னிலங்கையுடன் சமரசத்தை ஏற்படுத்தி அதன் மூலம் நிரந்தர அமைதியை எட்டவைக்கச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் தலைவர்கள் மற்றும் தரப்புகளின் வாதமாக இருந்து வருகின்றது.

ஆனால் அந்த முயற்சிகளுக்கும் அடியோடு ஆப்பு வைக்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றது போலும் ஹெல உறுமய.

நாட்டுக்குள் பிரிவினை கோருவது அரசமைப்புக்கு முரணானது என்று தெரிவித்து, அதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்றால் -

அரசமைப்பில் தெளிவாக உள்ள 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த விடமாட்டோம் என்று தடுப்பதும் கூட அரசமைப்பு விரோதச் செயற்பாடாகவே அர்த்தப்படுத்தத் தக்கது என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் தமிழர் தரப்பின் பேரம் பேசும் வலு நொறுக்கப்பட்டு விட்டது என்ற சூழலில் இப்போது பதின்மூன்றாவது திருத்தம் கூட கானல் நீராகி வரும் சூழ்நிலை. சுருங்கச் சொல்வதானால் அதிக உரிமைகள் கேட்ட தமிழர்கள் இன்று 'பிச்சை வேண்டாம்; நாயைப்பிடி!' என்ற திரிசங்கு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

# பேச்சுகளுக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்ட சமாதான செயலகத்தை மூடுவதற்கு முடிவு

## இதற்கான காரணம் தெரியாது என்கிறார் அதன் பணிப்பாளர்

கொழும்பு, ஜூலை 1

விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு மேற்கொண்ட சமாதானப் பேச்சுக்களுக்குத் துணை புரிவதற்காக அமைக்கப்பட்ட அரச சமாதான செயலகம் இந்த மாத இறுதியுடன் மூடப்படவிருக்கின்றது. அரச தலைவரின் செயலகம் இதற்கான உத்தரவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிறப்பித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சமாதானச் செயலகம் மூடப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாக நாம் கடந்த வாரத்தில் பேசியுள்ள போதிலும், அரச தலைவரின் செயலகத்தினால் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவில் இதனை மூடிவிடுவதற்கான காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை என இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகம் ரஜீவ விஜயசிங்க தெரிவித்திருக்கின்றார்.

இந்தத் தீர்மானம் எதற்காக எடுக்கப்பட்டது என்பதையிட்டு தனது கருத்துக்களை வெளியிடுவதற்கோ அல்லது இதனை மீள் பரிசீலனை செய்யுமாறு கோருவதற்கோ தான் விரும்பவில்லை எனவும் ரஜீவ விஜயசிங்க தெரிவித்திருக்கின்றார்.

இதனையடுத்து சமாதான செயலகத்தை மூடிவிடுவதற்கான செயற்பாடுகளை ரஜீவ மேற்கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இங்கு பணி புரிந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஒப்பந்த அடிப்படையிலேயே இங்கு பணிபுரிந்ததால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியிருக்கின்றது.

சமாதான செயலகம் மூடப்படாது என இரண்டு வாரங்களுக்கு முன்னர் தனக்கு உறுதியளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கும் ரஜீவ விஜயசிங்க, ஆனால் இப்போது இதனை மூடிவிடுமாறு அரச தலைவரின் அலுவலகம் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். இதன் எதிர்காலம் தனது கைகளில் இல்லை எனவும் அரச தலைவர் செயலகத்தின் கைகளிலேயே அது தங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கனகராஜா நினைவு பிரார்த்தனை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 1

அகில இலங்கை காந்தி சேவா சங்கம், அமரர் க.கனகராசா (மில்க்வைற்) நினைவு தினத்தை ஒட்டி அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வை நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெரு, 171 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மேற்படி சங்க அலுவலகத்தில் நடத்தவுள்ளது.

அன்றையதினம் மக்களின் பயன்பாட்டுக்கு மில்க்வைற் பிரசுரங்களைக் காந்தி நூலகத்தில் சேகரித்து வைப்பதற்கான திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக மேற்படி சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (201)

## 'உதயன்' ஊழியர் மீதான அச்சுறுத்தலுக்கு உடன் நடவடிக்கை எடுத்து உதவுக

### பொலிஸ்மா அதிபருக்கு டாக்டர் ஜயலத் கடிதம்

கொழும்பு, ஜூலை 1

'உதயன்' பத்திரிகையின் பணியாளர்கள் ஜூன் 30 ஆம் திகதிக்குப் பிறகு பணிக்குத் திரும்பக்கூடாதென இனந்தெரியாத நபர்களால் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள். இது குறித்து உடனடியாக விசாரணை நடத்தி அந்தப் பத்திரிகைக்கும் பணியாளர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு தெரிவிக்கும் கடிதம் ஒன்றினை ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன பொலிஸ்மா அதிபர் ஜெயந்த விக்ரமரட்ணவுக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

உதயன் பத்திரிகை இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஒன்று. அது யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பட்டு வெளி வருகிறது. தமிழ் மக்களால் வாசிக்கப்படும் பிரபல பத்திரிகை அது. இந்தப் பத்திரிகை ஊழியர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ப)

## நூல் வெளியீடு

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் ஆசிரியை திருமதி ஓம்சக்தி யசோதன் எழுதிய 'கைகேயி சூழ்வினைப் படலம்' என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் இன்று மு.ப. 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் அருட்தந்தை ம.ஜெறோ செல்வநாயகத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி சி.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (04)

# சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் குருபூசை தினத்தை இந்துமத நிறுவனங்களில் அனுஷ்டிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் குருபூசையை இந்துமத நிறுவனங்கள், பாடசாலைகள் அனைத்தும் அனுஷ்டிக்க வேண்டும் என்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வேண்டுதல் விடுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆத்மீகப் பெரியவரும் எம் மண்ணில் பல்வேறு அறப்பணிகளை நாவலர் பெருமான் வழியில் நின்று நிறைவேற்றியவருமான அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களின் குருபூசை ஆனி மாத விசாக நன்னாள் ஆகும்.

03.07.2009 வெள்ளிக்கிழமை அன்னையின் முதலாவது குருபூசைத் தினமாகும்.

இத்தினத்தில் சகல இந்து சமய ஆலயங்களிலும் இந்து நிறுவனங்கள், பாடசாலைகள் அனைத்திலும் அம்மையாரின் குருபூசையை பக்திபூர்வமாக அனைவரும் அனுஷ்டித்தல் எமது தலையாய கடமையாகும்.

அம்மையாரின் சிந்தனைகளை எதிர்காலச் சந்ததி அறிந்து ஒழுகுவதற்கு ஏதுவாகும்.

இப்புனித பிரார்த்தனை நாளை சிறப்பாகப் பேணுதல் வேண்டும்.

கொழும்பிலும் பிற நாடுகளிலும் இந்து ஆலயங்கள், சமய நிறுவனங்களில் அன்னையின் குருபூசையை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன- என்பதாகும். (203)

## சித்திரம் கைவேலை கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை 1

யாழ்.கல்வி வலயமும் கடவுளின் குழந்தைகள் நிதியமும் இணைந்து நடத்தும் சித்திரம்- கைவேலை கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் யாழ்.கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக கடவுளின் குழந்தைகள் நிதிய இயக்குநர் திருமதி ஜே.அன்ரன் கலந்துகொள்வார். (201)

### நாளை

| | |
|---|---|
| ஆனி 18 | 02.07.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.ப. 09.16 வரை |
| நட்சத்திரம்: | சுவாதி |
| | பி.ப. 04.19 வரை |
| சுபநேரம்: | 07.26 - 08.56 |
| ராகுகாலம்: | 01.26 - 02.56 |

## இலங்கை வங்கியின் தலைவர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்



யாழ்ப்பாணம், ஜூலை 1

இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க தனது உயர்மட்ட குழுவினருடன் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தருகிறார்.

இவரது விஜயம் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை வங்கி தனது சமூக சேவைக் கடப்பாட்டுக்கமைய பல நிறுவனங்களுக்கும் கல்வி மேம்பாட்டிற்கும் கலாசார முன்னேற்றத்திற்கும் பல வழிகளில் ஆரவாரமின்றி நிதியுதவி அளித்து வருகின்றது. சமீபத்தில் கூட யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஒரு அமைப்பான யாழ்.விஞ்ஞானக் கழகத்தின் வளர்ச்சிக்கு கணிசமான நிதியுதவி வழங்கியது.

மேலும் கல்வி மேம்பாட்டிற்காக பின் வரும் நிகழ்வுகளை அது நடத்தியுள்ளது. மாவட்ட ரீதியிலும் தேசிய ரீதியிலும் அதிக புள்ளிகளைப் பெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்கள் 50 பேருக்கு பரிசில்களும் ரூபா 10,000 வீதம் நிதியுதவியும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2008 ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை நடத்தி உயர் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2008 ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய ஐந்து வலயங்களுக் குட்பட்ட மாணவர்களுள் 3 'ஏ', 2 ஏ.பி. சித்தி பெற்றவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (500 மாணவர்கள்)

மாணவர்களுக்கு கல்விசார் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன.

மேலும் 'யூரோவில்' மாநாட்டு மண்டபத்தில் முக்கிய நிகழ்வாக 'வடமாகாண அபிவிருத்தியில் இலங்கை வங்கியின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் கருத்தரங்கு இன்று பி.ப.3.00 மணி - 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் தலைவர் இதில் கருத்துரை வழங்குவார்.

மேலும், அவர் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களைப் பார்வையிட கைதடி, கொடிகாமம் முகாம்களுக்கு செல்லவுள்ளார்.

அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப் பிரிவுக்காக இலங்கை வங்கியால் வழங்கப்படவுள்ள 30 லட்சம் ரூபாவையும் கலாநிதி காமினி விக்கிரமசிங்க யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஈ.தேவநேசனிடம் கையளிப்பார் என உள்ளது.(50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு யாழ்ப்பாணத்தில் இன்று முதல் நேர்முகப் பரீட்சை

தேசிய கல்வியியற் கல்லூரிகளின் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த டிப்ளோமாதாரி களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று தொடக்கம் யாழ்.மேலதிக கல்விப் பணிப் பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

தேசிய பாடசாலைக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் இருந்து மாகாணப் பாடசாலைகளுக்கு நியமிப்பதற் காக இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

நடனம் ஜி.டொன் பாஷா, ரீ.ஜெயரஞ் சனி, கே.மைதிலி, எஸ்.உதய பாரதி (யாழ்ப் பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி).

நாடகமும் அரங்கியலும் ஆர்.அனுஷா, எம்.எம்.ஏ.தெரேசா (யாழ்ப் பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி).

முதல் மொழி கே.கலைவாணி (தர்காநகர் தேசியக் கல்வியியற் கல்லூரி).

மனையியல் என்.யுசினா டமிலி (வவு னியா தேசியக் கல்வியியற் கல்லூரி)

இஸ்லாம் எம்.எம்.அன்வாஸ் (அட்டா ளைச் சேனை, கல்வியியற் கல்லூரி).

கணிதம் என்.விஜிந்தன், ரி.சுஜிகரன் (மட் டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி).

சங்கீதம் கே.அஜந்தினி, ஆர்.கமல வேணி, ஆர்.கார்த்திகா (யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி)

உடற்கல்வி கிருஷாந்தி, டெனின் கிறிஸ்ரி, ரி.மோக னப்பிரியா (வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி)

ஆரம்பக்கல்வி எஸ்.நராஜினி, என்.சுதா, பி.விஜயவர்த்தனி (யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி).

எஸ்.சித்திரா (மட்டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி).

விஞ்ஞானம் எம்.அம்பிகைபாகன், வீ.ராதிகா, ஜீ.துமி ஷன் (மட்டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி).

எஸ்.ஜெயந்தினி, என்.மயூரினி, என். நிரோபா, ரி.கோகுலன் (வவுனியா தேசி யக் கல்வியியற் கல்லூரி).

சமூகக்கல்வி எஸ்.லக்சுமிபிரபா (மட்டக் களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி).

வி.மண்டலேஸ்வரன் (யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி).

விசேட கல்வி ஈ.அஜந்தினி, ரி.ஜதுகுல தரன், ஜே.ஜசீபன், கோ.ராகுலன், கே.சிவ தர்சினி, ஆர். சோபிகா, வி.வனஜா, யோக ராணி (யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி). வி.கார்த்திகா (தர்காநகர் தேசியக் கல் வியியற் கல்லூரி).

தமிழ் கலைச்செல்வி, வை.முகுந்தன் (மட் டக் களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி).

எஸ்.தேனுகான்பி (தர்காநகர் தேசியக் கல்வியியற் கல்லூரி).

தொழில்நுட்பம் எஸ்.கிருஸ்ணசீலன் (மட்டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி).

## அகதிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கான நலன்புரி நடவடிக்கையின் மத்தியில் அரசியல் தீர்வு பற்றியோ அல்லது 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றியோ பேசவில்லை.

ஆனால், பாதிக்கப்பட்ட மக்கள் உடனடி யாக எதிர்பார்ப்பது அரசியல் தீர்வையல்ல. உயிர்வாழ்வதற்கான அடிப்படைத் தேவைக ளைத்தான் எதிர்பார்க்கின்றனர். அதில்தான் அரசும் அதிக கவனம் செலுத்தும்.

நாம் அதிக தொகைப் பணத்தைச் செலவு செய்து இந்த மக்களைப் பராமரித்து வரு கின்றோம். இம்மக்களின் நலனுக்காக அதி கூடிய முக்கியத்துவத்தை வழங்குகிறோம்.

இந்த மக்களைக் கூடிய விரைவில் மீளக் குடியமர்த்தி அவர்களின் வாழ்க்கையை வழமைக்குக் கொண்டுவர நாம் அர்ப்பணிப் புடன் செயற்படுகிறோம். அப்படிச் செய்யாது விட்டால் அந்த மக்களைப் புலிகளின் பிடியில் இருந்து மீட்டதில் எந்தப் பிரயோசன மும் இல்லாமல் போய்விடும்.

யுத்தம் இப்போது மிகவும் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. பயங்கரவாதம் அடிமட் டத்திலிருந்து ஒழித்துக்கட்டப்பட்டுள்ளது. யுத்தம் மூலம் புலிகளைத் தோற்கடிக்க முடி யாது என்று முன்னர் கூறுவார்கள். இப்போது வேறு விதமாக அரசின் மீது குற்றங்களைச் சுமத்துகின்றனர்.

யுத்தம் முடிவடைந்துள்ளதால் யுத்தத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 20 ஆயிரம் கோடி ரூபாவில் பாதித் தொகையாவது மிஞ்சியிருக்க வேண் டும். அதை அபிவிருத்திப் பணிக்குச் செலவிட வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இவர்கள் மீண்டும் மீண்டும் இலங்கையின் இறைமைக்குப் பாதகம் ஏற்படுத்தவே முற்படுகின்றனர். யுத்தம் முடிவடைந்துள்ள தால் எமது கடமை முடிந்துவிடவில்லை. யுத் தத்தால் இடம்பெயர்ந்து வந்த மக்களைப் பரா மரிப்பது எமது மிகப்பெரிய கடமை.

யுத்தம் முடிவுற்றபோதிலும் படைக் குறைப்பு எதுவும் இடம்பெறாது. முப்படை மற்றும் பொலிஸாருக்கு மேலும் 50 ஆயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட இடங்க ளில் அரச நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத் திச் செல்வதற்கும் அங்கு உரிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் எமக்கு அதிக படையினர் தேவைப்படுகின்றனர். (அ-சி)

## உதயன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் 'உதயன்' நிறுவனத் துக்கு சில அநாமதேய சக்திகள் அச்சுறுத் தல் விடுத்திருப்பது பற்றிய செய்திகள் வெளி யானதை அடுத்து இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சரு மான ஆறுமுகன் தொண்டமான் இவ்விட யத்தை உடனடியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இவ் விடயம் குறித்து 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரிய ருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் உரையாடல் ஒன்றை அமைச்சர் தொண்டமான் ஒழுங்கு செய்தார்.

இந்த உரையாடலின்போது 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியரிடம் ஜனாதிபதி தெரி வித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:

''எதிரணியைச் சேர்ந்த சில சக்திகளே அரசின்மீதும் என்மீதும் கெட்ட பெயரை ஏற் படுத்துவதற்காக இப்படித் தொலைபேசி மூலமும் பிறவழிகளிலும் ஒளிந்துகொண்டு இருந்து அச்சுறுத்தல் விடுக்க முயல்கின் றன. அத்தகைய சக்திகளை உரியமுறையில் ஒட்ட அடக்க நடவடிக்கை எடுக்கப்படும். அவை தலைதூக்க அனுமதிக்கப்படமாட்டாது.

''முடிந்தவை முடிந்துவிட்டன. இனிப் புது அத்தியாயத்தைத் தொடங்குவோம். பிரிவினைவாதத்தைக் கைவிட்டு நாடு ஐக் கியத்துடன் அபிவிருத்தியை நோக்கி முன் னேறுவதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு எனக்கு அவசியம்.

''ஊடகப் பணிக்குக் கெட்ட பெயர் ஏற் படாமல் அது நேர்சீராக நடப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும். இதற்காகத் தேவைப்பட்டால் ஊடக அமைச்சை நேரடியாக எனக்குக் கீழ் கொண்டு வரலாமா என்றும் கூட சிந்திக்கின்றேன்.

''உங்கள் ஊழியர்களை உற்சாகமாகப் பணியாற்றச் சொல்லுங்கள். எதிரணியின் வலைக்குள் வீழ்ந்து எமது அரசுக்குக் கெட்ட பெயர் வாங்கித் தந்துவிடாதீர்கள்.

''இந்த விடயத்தை உடனடியாக எனது கவனத்துக்குக் கொண்டு வந்து உரிய நட வடிக்கைகளுக்குத் தூண்டிய அமைச்சர் தொண்டமானுக்கும் எனது நன்றிகள். உங் கள் நன்றியையும் தெரியப்படுத்துங்கள்.

''அரசுடன் நெருங்கிய தொடர்பாடல்க ளைப் பேணி தமிழ் மக்களுக்கு அரசின் செய்தியை 'உதயன்', 'சுடர் ஒளி' ஊடகங் கள் எடுத்துச் செல்லவேண்டும். நாட்டின் அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுவோம். வாருங்கள்'' - என்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (உ)

## நாட்டின் பல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபாயம் உள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

கேகாலையில் எட்டியாந்தோட்டை, தெரணி யகல பகுதிகளிலும் மஸ்கெலியா மற்றும் களுத்துறையிலும் மண்சரிவு அபாயம் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இரததினபுரியின் களுகங்கை ஆற்றின் நீர்மட்டம் 574 மீற்றராக அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ள அதிகாரிகள், நீர்மட்டம் மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் வெள்ள அபாயம் ஏற்படலாம் எனத் தெரிவித்துள்ள னர். களுகங்கை, இரத்தினபுரி பகுதிகளில் தாழ் நிலங்களில் வசிக்கும் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறும் அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

## சட்டசபை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டசபையில் நேற்று கேள்விநேரம் முடிந்ததும் எஸ்.வி.சேகரைத் தவிர அனைத்து அ.தி.மு.க. உறுப்பினர்களும் ஒட்டுமொத்த மாக எழுந்து ''காப்பாற்று காப்பாற்று'' எனக் கோஷமிட்டனர். இதனால் அவையில் கூச் சல் குழப்பம் ஏற்பட்டது.

அவர்களை ஆசனங்களில் அமருமாறு சபாநாயகர் கேட்டுக்கொண்டமைக்கு பலன் ஏற்படவில்லை. அப்போது முதலமைச்சர் கருணாநிதி குறுக்கிட்டு, அவை நடவடிக்கை களுக்குக் குந்தகம் ஏற்படுத்தி அநாகரிகமான முறையில் குழப்பம் ஏற்படுத்துபவர்களை அவையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து அ.தி.மு.க. உறுப் பினர்களை அவையிலிருந்து வெளியேற்று மாறு சபாநாயகர் உத்தரவிட்டார். பின் அவர் கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். எஸ்.வி.சேகர் மட்டும் அவையிலேயே உட் கார்ந்திருந்தார். அ.தி.மு.க. உறுப்பினர் கள்வெளி யேற்றப்பட்டமையைத் தொடர்ந்து ம.தி.மு.க. உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

## அகதிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு உதவும் என்றார் அமைச்சர் சிதம்பரம்.

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப் பதற்கு இந்தியா போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனக் குற்றம்சாட்டப் படுவதை நிராகரித்துள்ள இந்திய உள்துறை அமைச்சர், ''நாங்கள் விடுதலைப் புலிகளுட னும் இலங்கை அரசுடனும் பேசினோம். இரு தரப்பும் அதனைச் செவிமடுக்கவில்லை'' எனத் தெரிவித்துள்ளார்.

### 13 ஆவது திருத்தத்தின் கீழ் தீர்வு

இலங்கையில் தமிழர் வாழும் பகுதி களுக்கு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத் தின் கீழ் அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என இலங்கை அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர் என்றும் அவர் சொன்னார். கச்சதீவில் இலங் கைக் கடற்படையினர் தளமொன்றை அமைப் பதற்கு சீனா உதவுகின்றது என வெளியாகி யுள்ள தகவல்கள் ஆதாரமற்றவை என இந் திய உள்துறை அமைச்சர் நிராகரித்தார்.

இலங்கையில் மோதலில் இடம்பெயர்ந்த வர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மந்த கதியில் முன்னெடுக்கப்படுகின்றமை குறித்த இந்தியாவின் அதிருப்தி சமீபத்தில் புதுடில் லிக்கு விஜயம் மேற்கொண்ட பஸில் ராஜ பக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ சகோதரர் களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்களது சொந்த மண்ணிலேயே அகதி களாக்கப்பட்டுள்ளவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகள் போதுமான வையல்ல என்ற தனது கவலையை இந்தியா சமீபத்தில் புதுடில்லிக்கு விஜயம் மேற் கொண்ட பிரதிநிதிகளிடம் தெரிவித்தது - என்றும் அவர் கூறினார்.

''இந்த விடயத்தில் மந்தப் போக்கினை இலங்கை அரசு வெளிப்படுத்துவதே எமக்கு கவ லையளிக்கும் விடயம். இடம்பெயர்ந்த மக்கள் தமது பகுதிகளில் மீளக் குடியேற்றப்பட வேண் டும். மாணவர்கள் இழந்த கல்வியை மீள ஆரம் பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி கள் வழங்கப்பட வேண்டும் என்பதை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது - எனவும் அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி, நாவற்குழி ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியமர்வு தொடர்பான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி - நாவற்குழி தெற்கு ஸ்ரீ மகா விஷ்ணு சன சமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

குறிப்பிட்ட பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களைக் கலந்து கொள்ளு மாறு தென்மராட்சி தெற்கு மீள்குடியமர் வோர் சங்கத்தின் செயலாளர் தி.தங்கவேலு கேட்டுள்ளார். (1)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி தமிழ்ப் பேரவையால் நடத்தப்படும் முத்தமிழ் விழா இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரியின் விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ் வுக்குப் பிரதம விருந்தினராக கமநல சேவை திணைக்கள ஓய்வுபெற்ற உதவி ஆணை யாளர் நா.குழந்தைவேலுவும், சிறப்பு விருந்தினராக தமிழ்த்துறை உதவிக்கல் விப் பணிப்பாளர் மீரா அருள்நேசனும் கலந்து கொள்வர். (1-6)

* * *

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியால யத்தில் அரங்க நிகழ்வு இன்று புதன்கிழமை மு.ப. 9.30 மணிமுதல் 11.30 மணி வரை நடைபெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் ம.சிவபாலசுந் தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஆரம் பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் கலந்து கொள்வார். (1-6)

## இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுச் செயலாள ராகப் பதவியேற்கிறார். இவருக்கு முன்னர் திருமதி சொக்கிலியா ஐயர் 2001 ஆம் ஆண்டில் சில மாதங்கள் இப் பதவியை வகித்தார்.

சீனாவுக்கான இந்தியத் தூதுவராக பணி புரிவதற்கு முன்னர் நிருபமா இலங்கைக் கான இந்தியத் தூதுவராக கடமையாற்றி னார்.

58 வயதான திருமதி நிருபமா ராவ் சிறந்த கவிஞரும் பொழுதுபோக்கு பாடகி யுமாவார்.

## 22 ஆயிரம் புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் பாதுகாப்பை நிலைநிறுத்து வதிலும், தேடுதல் நடவடிக்கைகளிலும் எமது படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை பெரும் எண்ணிக்கையிலான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எமது படையினர் அனைத்து இடங்களிலும் பாதுகாப்பை நிலைநாட்டி வருகின்றனர்.

இந்த வருடம் ஜனவரி முதல் இப் போதுவரை 22 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முப்படை மற்றும் பொலிஸுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆள்சேர்ப்பு தொடர்ந் தும் நடைபெறுகின்றது.

வன்னி படை நடவடிக்கையின்போது 5 ஆயிரம் படையினர் உயிரிழந்தும், 22 ஆயிரம் பேர் காயமடைந்தும் உள்ளனர். அதேபோல் புலிகளில் 22 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ள தோடு, 10 ஆயிரம் பேர் கைது செய்யப்பட் டும் சரணடைந்தும் உள்ளனர் - என்றார்.

SUBRA (14)
சித்தன்கேணி - வட்டுக்கோட்டை
இரு இடங்களிலும் ஒரே நேரத்தில் அரச
உத்தியோகத்தர்களுக்கான
ஆங்கிலம் By: Britto.
சிங்களம் By: Prof. லீலாகிருஷ்ணன்
ஆரம்பம்: 02.07.2009 மாலை 5.30 மணி
(நேரம் உங்களுக்கு ஏற்றவகையில் சீர்செய்யலாம்)

Trinity College And University
(PART OF THE EDUCATIONAL DIVISION OF THE U.I.C., INCORPORATED IN DOVER, DELAWARE - USA)
Jaffna Road, Manipay - T.P.No :- 060 - 221 - 6433
எமது மாணவர்களுக்கான முக்கிய அறிவித்தல்
மேற்படி எமது பல்கலைக்கழகத்தினுடைய அனைத்து பட்டப்படிப்புக்களும் 04/07/2009 அன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதால் அனுமதி விண்ணப்ப படிவம் பெற்ற அனைத்து மாணவர்களும் 03/07/2009ம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம.
Mobile :- 0777 - 110862
Mr.S.Selvathashan, Coordinator (North)

பெற்றோர் மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதியில்
தரம் 6,7,8,9,10,O/L (EVENING BATCH)
புதிய பிரிவு ஆரம்பம்: 01.07.09 மாலை 4 மணி
இன்று தொடக்கம் அனுமதிகள் வழங்கப்படுகின்றன. அனுமதி பெற்ற மாணவர்கள் புதன் (4 மணி) சமுகம்தரவும். யாழில் 33 வருட மாக தரம் 6-O/L வரை தனித்துவ மும் கட்டுப்பாட்டுடனும் தலைசிறந்த ஆசிரியர் குழாமினால் கல்விச் சேவையை முன்னெடுத்துச் செல் லும் ஒரே நிறுவனம்.
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ். T.P.No.0772288251

ASP Enterprises
ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட துவிச்சக்கர வண்டிகளும் (Reconditioned), மின்சாரத்தில் இயங்கும் (Electric Bycycles) புதிய சைக்கிள்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி,
360/9, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0776079352

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.